உ

கடவுள் துணை.

திருமலைச்சருக்கமென்னும்

அடிமுடிதேடிய

அரியயன்சண்டை அம்மானை.

இவை-செஞ்சி
ஏகாம்பரமுதலியாரவர்களால்
எழுதப்பட்டு,

ம-ள-ள-ஸ்ரீ,
தி. சின்னசாமிப்பிள்ளையவர்களால்
பார்வையிட்டு,

பூவிருந்தவல்லி
சுந்தரமுதலியார் குமாரர்
பூ. சு. குப்புசாமி முதலியாரது
ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1906,
சென்னை: புரசை;

REGISTERED COPY RIGHT.

விஷ்ணு.

பிர்மா.

உ

கடவுள் துணை.

திருமலைச்சருக்கமென்னும்

அடிமுடிதேடிய
அரியயன் சண்டை
அம்மானை.

விநாயகர் காப்பு.

வெண்பா.

மார்க்கண்ட மாமுனிவர் மகிட்சியுடன் தான்கேட்கத்
தீர்க்கமுடன் நந்திதேவர் தானுரைத்த—ஏர்க்கையுள
அரியயன் சண்டைதனை அம்மானை யாயோதக்
கரிமுகவன் பொன்னடியே காப்பு.

விநாயகர் தோத்திரம்.

முந்திமுந்திவிநாயகரே முக்கணனார்தன்மகனே
தந்திமுகத்தோனே தர்ப்பரியாள்புத்திரனே
தொந்திவயற்றோனே தொழுகைக்குமுன்னோனே
மூலாதாரப்பொருளே மூஷிகவாகனரே
சோதியாய்நின்றவரே சுத்தப்பரிபூரணரே
ஆதியாய்நின்றவரே யறுமுகர்க்குமூத்தவரே
வேதமுதலானவரே வித்தைக்குகந்தவரே
பாகமுடனுலகைப் பரிவாய்படைத்தவரே
ஆகமமானவரே யங்குசப்பாசனரே
ஐந்துகரத்தோனே யன்பர்க்குகந்தோனே
தொந்திவயற்றோனே தும்பிமுகத்தோனே
நினைத்தவரமளிக்கும் நிர்த்தக்கணபதியே
சீர்பாதம்யான்மரவேன் செல்வக்கணபதியே
அரியயன்சண்டைதனை யம்மானையான்பாட
பிரியமுடன்னுவில் புகழாய்குடியிருந்து
குற்றங்கள்நேராமல் குறையொன்றும்வாராமல்

நினைவுபிசகாமல் நிலைபாகமுன்னிருந்தும்
பாடவரமருள்வாய் பாதஞ்சருணமையா.

சுப்பிரமணியர் தோத்திரம்.

ஆதிசிவன்மகிழும் அம்பிகையாள்புத்திரரே
ஆறுமுகமானவரே ஆனைமுகர்க்கிளையவரே
தெய்வானைவள்ளிமகிழ் தேவர்க்கதிபதியே
சேவர்க்கொடியுடையச் சிங்காரவேலவரே
தோகைமயிலேருந் திருமால்மருகனரே
அழகுவேல்கையேந்து மரியின்மருகனரே
வேதனைச்சிரையிலிட்ட வீராருக்கையனரே
சோதிசுரூபமுள்ள சுப்பிரமண்ணியரே
சூரசம்மாரனரே சுத்தபரிப்பூரணரே
வள்ளியைச்சிரையெடுக்க வனவேடரானவரே
வேங்கைமரமாக வளர்ந்தங்கேநின்றவரே
வளையல்காரசெட்டியைப்போல் வடிவுகொண்டுவந்தவ [ரே
அகத்தியர்தனக்குமல்லோ அருந்தமிழுரைத்தவரே
தந்தைக்குபதேசந் தானுரைசெய்தவரே
அரியயன்சண்டைதனை யம்மானையான்பாட
கந்தரேயித்தருணம் வந்தருள்செய்யுமையா.

பரமசிவன் தோத்திரம்.

சந்திரசடாதரரே சந்திரசேகரரே
விந்தையுடன்கையிலை விளங்கும்விமலனரே
மான்மழுதரித்தவரே மகிழ்கையிலைவாசகரே
சத்தியுமைமகிழும் நித்தபரிபூரணரே
கெங்கைதரித்தவரே கீர்த்தியுடையவரே
ஆனைமுகனோடு அறுமுகனையீன்றவரே
முக்கண்ணுடையவரே முத்தியளிப்பவரே
அரவாபரணனரே ஆதிசிவனரே
பாம்பாபரணனரே பரமசிவனரே
கேட்டவரமளிக்குங் கிருபையுடையவரே
ஆனையுரித்தவரே அழகுதிருமேனியரே
ஏமனையுதைத்தவரே யெருதின்மேலேர்பவரே
காமதகனனரே காட்சியளிப்பவரே
இஷ்டமுடனுமையவட்கு யிடபாகமீந்தவரே
அரியயன்சண்டைதனை யம்மானையான்பாட
வரமருளயித்தருணம் வந்தருள்செய்யுமையா.

விஷ்ணுவு தோத்திரம்.

ஆதிவைகுந்தனரே யகிலமளந்தவரே
மங்கைலட்சுமிதன்னை மார்பிலணிந்தவரே
சங்குசக்கரந்தன்னைச் சதுராய்த்தரித்தவரே
எங்கும்நிரைந்தவரே யெழில்மாலளந்தவரே
காமனையீன்றவரே காசாய்புமேனியரே
குன்றையெடுத்தவரே கோவுகளைக்கார்த்தவரே
ஆதியென்னயானைத்துயர் அடவாகக்கார்த்தவரே
திருப்பாற்கடலதனில் தேடிபள்ளிக் கொண்டவரே
ஆயன்பெருமாளே ஐவர்சகாயனரே
பஞ்சவரைக்காத்தவரே பாரளந்தமாயவரே
கஞ்சனைவதைத்தவரே காளிங்கநிர்த்தனரே
கூரனிரணியனைக் கொடுமொர்ப்பிளந்தவரே
கொத்தோடுமிராவணன்தன் பத்துமுடிக்கொய்தவரே
அரக்கர்குலக்காலனரே யன்பரைக்கார்ப்பவரே
அரியயன்சண்டைதன்னை யம்மானையான்பாட
கரியமாலானவரே கார்த்தருளவேணுமையா.

உமையவள் தோத்திரம்.

ஆதிசிவனுர்மகிழும் அம்பரிப்பரம்பரியே
சோதியுமையவளே சுத்தபரிபூரணியே
உம்பரியானவளே யுலகம்படைத்தவளே
அம்பரியானவளே யகிலம்படைத்தவளே
மகிடனைக்கொன்றவளே மாயவன்தங்கையரே
ஈசனுர்தான்மகிழ யிடபாகம்பெற்றவளே
சத்திச்சடாதரியே சகலவுயிர்நாயகியே
அகிலமீரேழளித்த வங்கமழுபாணியரே
செகமெங்குந்தானிறைந்த சிதம்பரிதிகம்பரியே
உதகமுடியுடைய வுமையபரஞ்சோதியரே
கரிமுகனேடறுமுகனைக் களிப்பாக யீன்றவளே
தக்கனுடயாகமதைத் தானழித்தசோதியரே
மலையரையன்தான்மகிழ மகவாயுதித்தவளே
யெங்கும்நிரைந்தவளே யேகபரிப்பூரணியே
அரியயன்சண்டைதன்னை யம்மானை யான்பாட
இச்சமையம் நீயிருந்து யீஸ்வரியேகாருமம்மா.

லட்சுமிதோத்திரம்.

செந்திருவானவளே செகமெங்கும்நிரைந்தவளே
விஷ்ணுவுடமார்பதனில் விளங்குந்திருமகளே
கஷ்டங்கள்தீர்ப்பவளே கலியைத்தவிர்ப்பவளே
அஷ்டலட்சுமியெனு மாதாரமானவளே
ஸ்ரீராமர்தான்மகிழச் சீதையாய்வந்தவளே
ஆயனுர்தான்மகிழும் அலமேலுமங்கையரே
மாயவனுர்தான்மகிழும் மங்கைலட்சுமியரே
செந்தாமரையதனில் சிரப்பாய்வீற்றிருப்பவளே
அரியயன்சண்டைதனை யம்மானையான்பாட
பிரியமுட நீயிருந்துப் புகலவரந்தருவாய்.

சரஸ்வதிதோத்திரம்.

வேதனுர்தான்மகிழும் வெண்டாமரையாளே
ஆயனுடனுவுதனில் அமர்ந்தப்பெரும்வாழ்வே
நான்முகனுர்தேவியரே நல்லகலைவாணியரே
வாணிசரஸ்வதியே வாக்கருளவேணுமம்மா
அரியயன்சண்டைதன்னை யம்மானையான்பாட
பிரியமாயென்னுவில் பிரியாமல்தானிருந்து
யேடுத்தவராமல் யெடுத்தச்சொல்மாராமல்
கூறுமொழிப்பிசகாமல் குற்றங்கள்வாராமல்
நாவிற்குடியிருந்து நடத்துமம்மாயிக்கதையை
குறலில்குடியிருந்து கூறுமம்மாயிக்கதையை
பிழைகளொன்றும்வாராமல் பெற்றவளேகாருமம்மா
மரையவனுர்தேவியரே மலரடிக்குயான்சருணம்.

ஸ்தோத்திரங்கள் - முற்றிற்று.

கதையின்வரலாறு.

மார்க்கண்டேயர் நந்திதேவரைக்கேட்குதல்.

மார்க்கண்டமாமுனிவர் மகிழ்வாகத்தானுமன்று
நந்திதேவர்தம்மை நாடிமிகத்தொழுதுக்
கைகட்டிவாய்பொற்றி காலில்மிகப்பணிந்து
தொந்தமுடனெதிரில் நின்றுதொழுதுமேவதுகேட்பார்
ஐயாபெரியவரே யருள்நந்திதேவரேகேள்
அருணசலத்தலத்தின் அருள்மகிமையானதெல்லாம்

அருமையுடனீருரைக்க அடியேன்கேட்டுமகிழ்ந்தேன்
பெருமையுடனின்னமொன்று புகலவேணு மெந்தனுக்
பரமசிவனாரும் பரிவாகத்தானுமல்லோ [கு
அக்கினிமலையாக வருளாகநின்றதுவும்
அம்மலையினடிமுடியை யரியக்கூடாதலாலும்
பிரமனும்விஷ்ணுவுமே போய்தேடிவருத்தப்பட்டு
காணமல்நின்றவர்க்கு கங்காதரனுமன்று
அனுக்கிரகஞ்செய்ததுவும் அடியேன்தனக்குமிப்போ
ஆதியோடந்தமாக யரியவேநன்றாக
திருவுளம்பற்றவேண்டுந் தேவரீர் சுவாமியென்ன

மலையுண்டானவிபரத்தை

நந்திதேவர் மார்க்கண்டேயருக் குரைத்தல்.

அம்மொழிதான்கேட்டு யருள்நந்திதேவருமே
சிந்தைமிகக்கூர்ந்துச் சிவனடித்தோத்தரித்து
மார்க்கண்டமாமுனிக்கு மகிட்சியுட னேதுரைப்பார்
அக்கினிமலைப்பெருமை யன்பாகவிப்பொழுது
என்க்குத்தெரிந்தமட்டு மின்பமுடன்சொல்லிவாரேன்
சித்தமுடன்செவிகொடுத்து சீராகக்கேட்டிடுவாய்
சர்வசங்காரக்காலமதில் சதுராய்முறைப்படியே
பேசும்பலவுயிரும் பிரமனிடமேயொடுங்கி
பிரமனும்விஷ்ணுவிடம் போயல்லோதானொடுங்கி
விஷ்ணுவும்ருத்திரனிடம் வந்தெல்லோதானொடுங்க
ருத்திரனைவரும் மகேசுரனிடமொடுங்க
மகேசுரன்தானுமல்லோசதாசிவத்திலொடுங்க
சதாசிவன்தானுமல்லோ விந்துவிடமேயொடுங்க
விந்துவுந்தானுமல்லோ நாதத்திடமொடுங்க
நாதமுந்தானுமல்லோ சத்தியிடமேயொடுங்க
சத்தியுந்தானுமல்லோ பரமசிவத்தி லொடிங்கி
அந்தபரமசிவம் அன்பாய்திருவுளங்கொண்டு
எல்லாங்கடந்ததொரு யெழில்தத்துவமுடிவில்நிற்கும்
ஒன்றாயப்படிக்கெல்லா மொடிங்கியக்காலத்திலே
தனியாகநின்றதொருத் தர்ப்பரமசிவனாரும்
உலகமுண்டாக்கவென்று உத்தமருமெண்ணங்கொள்ள
கொண்டயளவிலேதான் குரிப்பாகவட்சணமே
அந்தசிவனிடத்தில் அருளாகத்தோன்றியதோர்
பராசத்தித்தன்னிடத்தில் பண்பாகச்சொல்லுவன்கேள்

குடிலையெனுஞ்சத்திதோன்றி கூறுவேனதில்தானும்
மற்றுமுள்ளதத்துவங்கள் மகிழாயுண்டாயினபின்
பஞ்சக்கிருத்தியங்களால் பரிவாகத்தானுமல்லோ
முன்னேயொடுங்கியவர் முறையாயுண்டாயினர்கள்
விண்டுவின்புத்திரனும் வேதநந்தப்பிரமநப்போ
மாவுலகம்சிருஷ்டிக்க மனதிலவரெண்ணிடவே
அப்படிநினைந்தவுடன் அருளாகத்தானுமல்லோ
மரீசிஆங்கிரசர் புலத்தியர்ப்புலவருடன்
கிருதுயத்திரு சனபதியென்றுசொல்லும்
ஏழுரிஷிகளுமே யெழிலாகப்பிறந்தார்கள்
தக்கன்வலதுகால் பெருவிரலிலேபிறந்தான்
பிருகுரிஷியென்பவனும் பிரந்தானேமார்பிடத்தில்
தருமதேவதைகளும் தான்பிறந்தார்முகமதனில்
இப்படியாகவல்லோ யிவர்கள்பிறந்தவுடன்
பிரமனிடப்பிள்ளைகளாம் புகழானயேழுவரில்
மரீசிதன்னிடத்தில் மகிழ்காசிபர்பிறந்தார்
தக்கனென்பவனப்போ தான்பெற்றனன்பதுபெண்
அந்தநல்லப்பெண்களிலே யானபதிமூன்றுப்பெண்ணை
காசிபர்தானுமல்லோ கலியாணஞ்செய்துகொண்டார்
அதில்மூத்தோளாகியதோர் அதிதியவள்வயற்றில்
முப்பத்துமுக்கோடி தேவர்களுந்தான்பிறந்தார்
அதிதிக்கிளையவளாம் திதிமங்கைத்தன்வயற்றில்
எரணியன்யெரணியாட்சன் எனயிருவர்பிறந்தார்
பிரசித்தமாகவல்லோ பெற்றயிருவர்களில்
இரணியனனவனு மெழிலாகத்தானுமப்போ
பிரகலாதன்முதலாகப் பெற்றனைந்துப்புதல்வர்
அந்தப்பிரகலர்தன் அருந்தவமேபுரிந்தும்
மூன்றுநல்லப்பிள்ளைகளை முசியாமல்பெற்றெடுத்தார்
வீரமுள்ளமூவர்களில் விரோசனனென்பவனும்
மாவலியென்பவனை மகிட்சியுடன்பெற்றெடுத்தான்
மாவலியென்பவனு மகிழ்வாகவப்பொழுது
வாணசூரனையும் வண்மையுடன்பெற்றெடுத்தான்
அந்தநல்லவாணசூரன் அருந்தவங்களேபுரிந்து
பரமசிவனிடத்தில் பாங்காய்வரங்கள்பெற்று
பிரமன்தொழும்படியாய் பெருவாழ்வு பெற்றிருந்தான்
மலைகள்சிறகருக்க மகிழ்வாகவப்பொழுது
இந்திரர்க்குழுதுகெலும்பை எழிலாகத் தான்கொடுத்து

தேகத்தைவிட்டுமல்லோ திகழாகப்பேறும்பெற்ற
ததிசிரிஷியானவர் தகுதியாய்த்தானுமல்லோ
சம்பரன்முதலாகச் சதுராகப்பத்துபேர்கள்
அசுரர்கள்தங்களையும் அடுக்காகப்பெற்றெடுத்தார்
சீராகப்பெற்றதிலே சிங்கிகையென்பவளும்
இராகுமுதல்நான்குப்பிள்ளை எழிலாகப்பெற்றெடுத்தாள்
அவளுக்கிளையவளும் அசுரர்மூவரைப்பெற்ருள்
காலையவளென்பவளுங் காலக்கேயர்களான
ஆறுபேர்தங்களையும் அடுக்காகயீன்றெடுத்தாள்
நீண்டசிரகுடைய கெருடனோடுஅருணனுடன்
விளங்கவேநான்குபிள்ளைவிந்தையவள்பெற்றெடுத்தாள்
விஷங்களையொத்ததொரு விழிகளைத்தானுடைய
சத்தியவளென்பவளும் சர்ப்பங்களைபெற்றெடுத்தாள்
அருட்டையவள்தன்னிடத்தி லடுக்காகத்தானுமல்லோ
அரம்பையூர்வசிமுத லானதோர்பெண்கள்பிறந்தார்
இலங்கினியென்பவளும் முனிவருடக்கிருபையினுல்
கருதும்பதினாருவகை கந்தருவரையும்பெற்ருள்
கபிலையாள்தன்னிடத்தில் காளைபத்துபேர்பிறந்தார்
அங்கிரீசிசனபதியா மானயிருவர்களும்
காந்துருவர்தங்களையும் களிப்புடனே பெற்ருர்கள்
அத்திரியென்பவரும் அருளாகத்தானுமல்லோ
சூரியச்சந்திரரைச் சுத்தமுடன்பெற்றெடுத்தார்
புலத்தியரானவரும் பெற்றவகைக்கேளும்
இராட்சதர்வானவர் கின்னரிவர்களைப்பெற்ருர்
புலகரிஷியானவரும் பெற்றவகை சொல்லுவேன்கேள்
கிம்புருடரோடுமல்லோ மிருகங்களையும்பெற்ருர்
சனபதியானவரும் தருணம்பொருந்திபின்னும்
அஷ்டவசுக்களையும் அடுக்காகத்தானும்பெற்ருர்
பிருகுரிஷியென்பவரும் பேசக்கேளப்பொழுது
கலியென்பவளோடுச் சவுனகரையும்பெற்ருர்
இவர்களைப்பெற்றது மல்லாம லின்னமுந்தான்
இலக்குமிதன்னையும் நலமாகப்பெற்றெடுத்தாள்
அப்பருவம்பொருந்தியரோ ரானதொரு பெண்களிலே
கலியென்பவளுமல்லோ களிப்பாய் சுக்கிரனைபெற்ருள்
சூரியன்தன்மனையாளை சேருவதற்க்காக
எத்தனைப்பட்டபோது யவளதற்குப்பொருந்தாமல்
பெண்குதிரைரூபங்கொண்டு பேதையவளோடையிலே

சூரியனுமாண்பரியாய் துடர்ந்துமேதான்துரத்த
அப்போதுபெண்பரியு மானவள்திரும்பிபார்க்க
கண்டெல்லோசூரியனுங் கடுகெனவேயப்பொழுது
இரண்டுநல்லநாசிதனில் இந்திரியந்தனையூற்ற
அசுவனிதேவரிருவர் அடுக்காகப் பிறந்தார்கள்
அவர்கள்பிறந்தவுடன் அச்சமுண்டாயினவாம்

பிரம்மதேவன் மம்மதைக்கொள்ளல்.

இப்படிக்காகவல்லோ யிருக்கின்றக்காலமதில்
சகலமுமுண்டாக்கின சதுர்முகதேவனவன்
இந்தவுலகமெல்லா முண்டானது நம்மாலென்று
தன்னையறியாமலே தான்கொண்டுவாங்காரம்
தனக்குநிகரில்லையென்று தலைக்கீழாதுள்ளியல்லோ
வைகுந்தந்தனைத்தேடி வலுவினில்போயெதிர்த்து
பகையதுக்கொள்ளும்படி பரிவாகயெண்ணங்கொண்டு
வாகாய்ச்சங்கீதம்பாடும் வண்டுகள்தான்சூழ்ந்த
துளபமாலைதரித்து துலங்கியேவாழுகின்ற
விஷ்ணுவைத்தான்பார்த்து வேதனுமப்பொழுது
அவமதித்துச்சிலவார்த்தை அயனுமேயேதுரைப்பான்
விஷ்ணுவே நீகேளும் விளங்கவேயிப்பொழுது
ஈரேழுப்பதினாலு யெழிலானலோகங்களும்
காணவேதான்விளங்கும் கருத்ததோர்மேகங்களும்
சதுராகத்தான்விளங்கும் சத்தசமுத்திரமும்
சாற்றும்தன்மையான சத்தகுலப்பருவதமும்
உண்டாகும்படியாக யுகந்துமனதால்படைத்து
இப்போதுவாழ்கின்ற எல்லாவுயிர்களையும்
உண்டாக்கவலுமையது வுரிதியுடன்தானமர்ந்த
மரீஷிமுதலான ரிஷிகளையுந்தானும்பெற்றேன்
என்னுடையப்பிள்ளைகட்கு பிள்ளைகளானதொரு
பிரகஸ்பதியுடனே புகழ்மற்றதேவர்களும்
சந்திரசூரியர்களும் சார்ந்தவசுரர்களும்
கெந்தருவர்கிம்புருடர் சித்தர்கணநாதர்களும்
தேவேந்திரன்முதலாய் திக்குபாலரெட்டுபேரும்
இருக்கின்றயிவர்களெல்லா மென்னாலுண்டாகினர்கள்
ஆனதால்விஷ்ணுவே யரையுமென்மொழிகேளும்
குறையில்லாசகலத்திற்குங் கூறுமுதலானக்
கர்த்தனெனென்பதுவும் கடவுளுநானென்பதுவும்

என்பிள்ளைத்தான்பிரமன் யென்றுவுரைப்பதையும்
இன்றுமுதலாக யியம்பாமல்மறந்துவிடு
என்னுடையக்கைனாலே யிவ்வுலகம் படைக்காவிட்டால்
எப்படிக்குநீயிருந்து யாவரையுங்காப்பாற்றுவாய்
செவுரிருந்தாலல்லவோ சித்திரங்களெழுதலாகும்
செவுரில்லாயெழுதுகின்ற சித்திரமுந்தானுமுண்டோ
யெழிலாகயாவையுமே யிரட்சிக்கின்றோமென்றக்
கெருவமதைவிட்டுவிடு கேவலமாய்ப்பேசாதே
அப்படிக்குவிடாமல் போவையேயாமானால்
உன்னுடையவுத்தியோகத்தை வுடனேநான்வாங்கிவிட்
வேறொருவன்றன்னை விளங்கவுண்டாக்கிவைத்து [டு
இரட்சிக்குந்தொழிலுக்கு நிட்சயமாய் நேமிப்பேன்
என்னுடையப்புத்திரர்கள் பௌத்திரர்களானதொரு
தேவர்க்கூட்டங்களுன்னைத் தேடியேவந்துமிப்போ
வல்லுயிரைவாங்கும்படி வளைத்துக்கொள்வதற்குமுன்
திருப்பாற்கடலுக்குள்ளே தேடியேபோய்குதித்து [னே
ஒருவர்க்குந்தெரியாமல் ஓடியொளித்துக் கொள்வாய்
ஞானச்சொரூபியான நற்பிருகுரிஷியவரும்
இட்டதொருசாபத்தாலே யிரந்திரந்துபூமியிலே
பத்துதரம்பிரந்தாயே பகுத்தரியவில்லையோ நீ
யாவையும்நான்படைத்து என்னுடையக் கைகளெல்லா
காப்பேறியெப்படிப்பார் கருத்துயிருக்கின்றது [ம்
ஆனாலுமின்னமுந்தா னரையுவேன்கேள் விஷ்ணுவே
நாபிக்கமலத்திலே நான்பிறந்தனென்றுமேதான் [நீ
நிந்தனைச்சொல்லாதே நீருமேமுன்னாலே
தூணினிடத்திலே துலங்கவேபிறந்தாயே
அத்தூணுமுந்தனுக்கு ஆகுமோதந்தையுந்தான்
அல்லதுதாயென்று அரையப்படுமோசொல்
அத்தூணுனக்குத்தந்தை யாகுமேயாமானால்
எனக்குநீதந்தையென்று யியம்புவதுவுண்மையாகும்
அரியவேமூங்கிலிடம் அக்கினியுந்தான்பிறந்து
அம்மூங்கில்தனைகொளித்திப் போடுவதுமறியாயோ
அப்படிக்குவுன்னிடத்தில் யான்பிறந்திருந்தாலும்
உன்னையுமிப்பொழுதே வுலகமறியும்படி [று
அழித்துமேபோடுகிறேன் அரைநொடியில்பாருமென்
பிரமனுமப்பொழுது பேசினனகடாக
அந்தமொழிகேட்டு ஆதிநாராயணர்க்கு

அவ்வலரிக்கண்கள்ரெண்டும்செவ்வலரிப்போற்சிவந்து
ஈயத்தைக்காய்ச்சியல்லோ யிருசெவியில்விட்டாப்போல்
கோபமிகப்பெருகி கொக்கரித்துப்பற்கடித்து
புகைகளெழும்பும்படி பெருமானவர்நகைத்து
இவனுக்குயிந்தகெர்வம் எவ்விதத்தில்வந்ததென்று
ஆலோசித்துமப்பொழுது ஆதிமூலமேதுசொல்வார்

மகாவிஷ்ணு பிர்மனைக்கேட்குதல்.

கேளுமடாபிரமாவே கேவலமாய்பேசவந்தாய்
மதியாமலென்னையும் நீ மடத்தனமாய் பேசவந்தாய்
அரியாமலெந்தனை நீ அகங்கொண்டுபேசுகுரய்
தெரியாமலென்னையும் நீ திறமையிலாபேசவந்தாய்
நீவந்தவழியதனை நினைவிலையுமெண்ணவில்லை
என்னுடையநாபியது யுனக்குத்தா யென்றுமேதான்
சற்றுமாலோசியாமல் சதுர்முகனேபேசவந்தாய்
பிள்ளைகள்செய்தபிழை பொருப்பதுதந்தைகடன்
என்றெண்ணியிதுவரைக்கு மிருந்தேனன்பேசாமல்
பெற்றபிள்ளையென்றெலவோ குற்றம் நினையாதிருந்தேன்
இப்படிக்கொற்றவார்த்தை யினிபுகல்வை யாமானல்
சற்றும்பொறுக்கமாட்டேன் சதுர்முகனேயின்னங்கேள்
கோபத்தையுடையதொரு கூரானமதுவவனும்
யானையைப்போல்விளங்கு மந்தக்கையிடவனும்
புகழானயிவரிருவர் பிள்ளையெனக்கல்லவா
என்னையிகழ்ந்தவர்கள் யெதிர்த்தப்படியினலே
கோபம்பெருகியல்லோ கொன்றுவிட்டேனவர்களையும்
மனமரிந்துத்தீங்குசெய்தால் மகனென்றுபார்ப்பதுண்
தேகத்தினிடமாகத் தானெறுகட்டிகண்டால் [டோ
அதையுமருத்தெரிந்து யாக்கிடுவார்சொஸ்தமுடன்
இப்படிமனுஷருட யியற்கையதுத்தானிருக்க
கேளடாபிரமனே நீ கேவலமாய்பேசவந்தாய்
பயித்தியக்காரனந்தப் பரமசிவந்தானும்
உன்னுடையத்தலையிலொன்றை யுமாபதியுந் தான்பிடிங்
அன்றெறிந்தக்காலத்தில் அத்தலையைமறுபடியும் [கி
உண்டாக்கிக்கொள்வதற்கு யுனக்குவகை யில்லையேதான்
உன்னையெப்படித்தலைவ னென்றுமேசொல்குறது
இத்தலையைக்கொண்டுதானே யியம்பக்கேள் பிரமனே நீ
ஆதிசேஷன்முடிதனிலே யன்பாகவிருக்கின்ற

இந்தநல்லப்பூமிதனை எழிலாகநீபடைத்தாய்
சோமுகாசூரனென்னுஞ் சுத்தமுளவீரனவன்
உன்னிடத்தில்வேதங்களை ஒருமிக்கப் பிடிங்கிக்கொண்டு
போனபோது நீயும்நின்றுப் புலம்பித் தவிக்கையிலே
மச்சவதாரமும்நான் மகிட்சியுடன்தானெடுத்தும்
அடவாகயட்சணமே யவ்வசுரன்தன்னைக்கொன்று
வேதங்களைவாங்கிவந்து விளங்கவுனக்குத்தந்தேன்
அதுகளுமில்லாமல் அயனே நீயின்னமுங்கேள்
அதிகசாமார்த்தியமுள்ள அசுரர்களையுங்கொன்று
தேவர்களோடுவுன்னை தீங்கில்லாக்கார்த்துவந்தேன்
எட்டிமரமானாலும் யிருந்தால்தான்வைத்ததாக
அதனையுமுலகுதனில் வெட்டத்துணியார்கள்
அப்படிப்போலாக யானுமனதிலெண்ணிப்
பிள்ளையென்று நானினைந்து கொல்லமனதுவல்லை
கொல்லக்கூடாதேயென்று கூசிப்பயப்படுரேன்
என்றுமேவிஷ்ணுவப்போ எடுத்துமிகக்கூற
இப்படிக்காகவல்லோ யிருவர்களுமப்பொழுது
எத்தனையோவார்த்தைகளை எடுத்துமிகவுரைத்தார் [ரே
அப்பால்நடக்குங்கதை யறைகுவேன்கேள் மார்க்கண்ட

பிரமனும் விஷ்ணுவும் உத்தம் செய்குதல்.

ஒருவர்க்கொருவரப்போ யுதாசினங்கள் பேசிக்கொண்டு
கோபமிகப்பெருகிக் கொக்கரித்துப்பற்கடித்து
புஜங்களைத்தட்டியப்போ போர்கோல மாகவல்லோ
நின்றவர்கள்கெர்ச்சித்து நேராகவப்பொழுதும்
பேரிடிபோல்சத்தமிட்டு பூமியில்குதித்தார்கள்
நெருங்கினார் நின்றார்கள் நெருப்புப்பொறிபரக்க
விழிகளைத்திரந்தலவோ வெகுகோபமாகப்பார்த்து
சதுர்முகனும்விஷ்ணுவுமே சண்டைகள்செய்யயிலே
புகலொணுமலைகளெல்லாம் பொடிபொடியாயினவாம்
அண்டம்படாலென்று யப்போதுதான்வெடித்து
பற்பலகிரணமுடையப் பரிதியோடுச்சந்திரனும்
ஒளியதுத்தான்மயங்கி யோடியொளித்தார்கள்
ஆதிசேஷன்பாரமதை யவனும்பொருக்காமல்
மெற்றவருத்தமுற்று மெய்யைநெளித்துக்கொண்டான்
அப்போதுதேவர்களும் அலரிமிகப்பயந்து
கர்ப்பகாலம்வந்துமிப்போ கணக்காகத்தான்தோன்றி

உலகமழியுமென்று வொருமிக்கத்தானினைந்து
கண்களைமூடிக்கொண்டார் கனமுள்ளதேவரப்போ
பலபலென்றுநட்சத்திரம் பாரிலுதிர்ந்தனவாம்
கருமேகக்கூட்டமெல்லாங் கலங்கித்தவித்தனவாம்
உலகமெலாந்துன்பமுற்று வொருமிக்கத் தானுமப்போ
அடுக்கதுத்தான்குலைந்து யடியோடே தான்விழுந்து
செந்தூளுங்கருந்தூளுஞ் சேர்ந்து யெழும்பினவாம்
கெங்கைமுதலானதொரு கீர்த்தியுள நதிகளெல்லாம்
தண்ணீர்களில்லாமல் தான்வற்றிப்போயினவாம்
அஷ்டதிக்கினிலுள்ள யானைகள் திடுக்கிடவும்
ஒருவரையோர்மேலே ஓங்கிதூக்கியெறிவார்கள்
மறுபடியுங்கீழேவந்து மண்மேல்விழுவார்கள்
விழுந்தெழுந்துஓடிவந்து விரைவாக யெதிரில்நின்று
ஒருவர்க்கொருவரங்கே யோங்கிகுத்து விடுவார்கள்
மடியைப்பிடித்தெலவோ மல்லாடியிருவர்களும்
சூறைபோல்னேகவிசைச் சுழன்றுத் திரிவார்கள்
பகலுமிரவுமங்கே பார்க்கவலமிடமாய்
வருவதுப்போலாக வாகாயிருந்தனவாம்
அந்தநல்லவேளையிலே யானவுலகமதில்
ஊர்வனப்பரப்பேன தவிழ்வன நடப்பேனெனும்
அறையுஞ்சீவராசிபோலே ஆகாயம்பரந்தனவாம்
நிலையாகநின்றதொரு நீண்டவிருட்சங்களும்
நிலையதுத்தான்தவரி நீடித்திரிந்தனவாம்
திரளாகநிரைந்ததொரு திகழைந்துலகையாகும்
தேவக்கருக்களெல்லாந் தவுடுபொடியாயினவாம்
எவ்விடமுமகங்காரம் எழிலாய்நிரைந்ததங்கே
ஆனமகமேருகிரி யசைவுற்றுநின்றனவாம்
சத்தசமுத்திரமு சேராகிப்போயினதாம்
சர்வசங்காரக்காலம் சார்ந்ததென்றுசொல்லும்படி
இருவருஞ்சண்டைசெய்யும் எழிலானவேளையிலே

தேவர்கள் தேவேந்திரனிடஞ்சென்று
தங்கள் துக்கத்தைக் கூறல்.

அந்தநல்லவேளையிலே அண்டமுளத் தேவரெல்லாம்
கண்டுப்பயந்துமல்லோ கடுகெனவேயொன்றுகூடி
தேவேந்திரனிடத்திற்கு திரமாகப்போய்ச்சேர்ந்து
தங்களுடத்துக்கமதை தாமெடுத்துக்கூறுமுன்னே

தேவேந்திரனுர்பட்ட துன்பமெலா மெடுத்துச்சொல்லி
பின்புதேவரைப்பார்த்து பிரியமுடனே துகேட்பார்
நீங்கள்வந்தக்காரியத்தை நிகழ்த்துவீ ரெந்த னுக்கு
அப்போதுதேவரெல்லாம் அடைவாகயே துரைப்பார்
தேவர்க்கதிபதியே தெரியவேசொல்லுவோம்கேள்
பிரமாவிஷ்ணுக்களெனும் புகழானயிருவர்களும்
பூமியிலேயிரங்கிப் பூலோகந்தத்தளிக்க
செப்பொணுயுத்தமதுச் செய்துவருகிருர்கள்
அதினுலேயெங்களுக்கு யரைகுவோங்கேளுமிப்போ
பிழைக்கத்தகுந்தமார்க்கம் புண்ணியரே வேரேயில்லை
யெல்லார்க்குங்காரணமா யிருக்கின்றப்பொருளான
பரமசிவனடியைப் பாங்காகவேதொழுதும்
இந்தவொருசேதிதன்னை எடுத்துமிகக்கூறுவதே
காரியமென்றெலவோ யென்ருர்கள்தேவரப்போ
அமராபதியோனும் அம்மொழிக்குச்சம்மதித்து

தேவர்களோடுதேவேந்திரனும்
பரமசிவனிடம்வந்துகூறல்.

தேவர்கள்தன்னேடு திகழாகத்தானெழுந்தும்
கயிலையங்கிரிநாடிக் கடுகெனவேதானடந்து
பரமசிவனுடையப் பரிசுத்தமானதொரு
தாமரைமலர்ப்போன்ற தாளிணைமிகத்தொழுது
தேவேந்திரன்முதலான தேவர்களெல்லோரும்
ஆதிசிவன்முன்னே யன்பாகவேதுரைப்பார்
மங்கையுமையவளும் மகிழ்கின்றபாகனரே
வஞ்சகங்கொண்டுமல்லோ விஷ்ணுவும்பிரமனுமாய்
சண்டைகள்செய்வதினுல் சகலர்க்கும்வருத்தமாச்சு
அவ்வருத்தந்தீர்க்கவேண்டும் ஆதிப்பரம்பொருளே
பிள்ளைக்குத்தாயன்றி பெரியதுணைவேறுமுண்டோ
அன்னையில்லாதுவேறு யாதரிப்பாறுமுண்டோ
உருண்டுகொண்டுப்போகின்ற வண்டியின் சக்கரம்போல்
அஞ்சானம்பொருந்திய யப்பிரப்பிரப்பையுமே
மாறிமாறிப்பிறந்து வருத்தமனுபவியாமல்
மோட்சமதனைப்பெற யுனக்கடிமையாய்புகுந்து
ஆனவுனதுடைய யளவில்லாக்கிருபையுற்ற
கடலில்குளித்தலவோ களித்தடைக்கலமானேம்
அளவற்றப்புழுக்களுமே யடைவாகத் தான்சேர்ந்து

குடைந்துக்கொண்டிருக்கின்ற கூறுமுடல் பாரத்தைப்
பொறுக்கமுடியாத புழுக்காகியேவிளங்கும்
அஞ்ஞானந்தானோட யருள்புரியுந்திருவே
கிருபைப்புரிகின்றக் கீர்த்தியுளப்பரம்பொருளே
பெறியசமுத்திரத்தில் போயிமுழுகினாலும்
போகாத்மும்மலமாம் பொருந்துமழுக்கையுமே
போக்கடிக்குமுந்தன் திருப்பொன்னடியாம்சேர்ந்தோம்
இனிமேலுமெங்களுக்கு யாலோசனைவேறுமில்லை
அனுக்கிரகஞ்செய்யவேண்டு மாதிபரஞ்சுடரே
என்றெல்லோதேவர்களு மெழிலாய்தோத்திரஞ்செய்ய
அப்போதுபரமசிவன் யாலோசனைப்புரிந்தும்
அரியயன்தனக்குவந்த யச்சண்டைமூலமதை
தெரிந்தெல்லோபரமசிவன் திகழாகவப்பொழுது

பரமசிவன் தேவர்களுக்கு மூவருக்கும் விடைகோடுத்தல்.

நடுக்கமடைந்ததொரு நன்முனிவர் தேவர்க்கெல்லாம்
கார்ப்பேனென்றுயவர்களுக்கு கனத்தவுருதிசொல்லி
போகவிடையளித்துப் புகழாகவப்பொழுதும்
தேவர்முனிவர்பயம் தன்னையொழித்திடவும்
விஷ்ணுக்கும்பிரமனுக்கும் வந்தபகையொழித்திடவும்
அடுக்குக்குலையாமல் அண்டமிருந்திடவும்
கிருபையதுச்செய்யவெண்ணி கீர்த்தியுடனப்பொழுது
தடுத்தாட்கொள்வதற்கு தயவதுதான் துடர்ந்து
அக்கினிசொருபத்தோடு யளவாகக்கூடியதோர்
மலையாகிப்பரமசிவன் மகிட்சியுடனப்பொழுது
இவ்விருவர்தங்களையும் எழிலாகத்தடுக்கும்படி
எழுந்தருளினருமப்போ ஈஸ்வரனுர் மனதுகூர்ந்து
அம்மலையினபிரதாபம் அரியவேசொல்லுவேன்கேள்
பாதாளலோகமுள்ளப் பாம்புகளானதெல்லாம்
அம்மலைதனக்குசல்லி வேராகத்தோன்றினவாம்
அதின்கீழ்பருத்தவேரும் யடைவாகத்தானோடி
பூமிப்பெருதாகப் புகழாகதான்கிளைத்தும்
தேவலோகங்களெல்லாந் திகழாகத்தான்தாண்டி
பிரமலோகமுகட்டைப் புகுந்துமிகவுடைத்து
அண்டகடாகவெளி யடவாகத்தான்கடந்து
அப்பாலிருக்கின்ற யப்பெருவெளிக்குமேலாய்

இருக்கின்றயிடத்திற்கு மெழிலாகயூடுரிவி
அக்கினிசொருபமுள்ள யானமகமேருவிற்கு
அடுத்ததென்றுச்சொல்லும்படியடவாய்வளர்ந்ததுவே
நெடுந்தூரங்கிரணங்களை நேராகவீசுகின்ற
சூரியன்தன்னுடைய தேரினிற்கட்டியதோர்
குதிரைகள்சஞ்சரிக்கக் கூடாதவுலகமெல்லாம்
ஓடிக்கிளைத்ததொரு நீலமணியைப்போலும்
இருளையுமோட்டுதற்கு ஏற்றிவைத்த விளக்கைப்போல்
புகழாகநின்றெலவோ பிரகாசிப்பதினாலும்
இபம்பும்படியான யேழுசமுத்திரத்தும்
வடவாமுகாக்கினியும் வாகாய்ப்பரந்தாப்போலும்
சிவப்புநிரம்பொருந்தி சமுத்திரங்களிருந்தனவாம்
சத்தகுலப்பர்வதங்கள் சதுராகத்தானுமல்லோ
இந்தப்பிரகாசத்தினால் யிருந்தனவாம்சிவப்பாக

அக்கினிமலையைக்கண்டு பிர்மா விஷ்ணு
அடிமுடிகாண சம்மதப்படுதல்.

ஆச்சரியமாகவல்லோ ஆகாயப்பரியந்தமும்
அக்கினிசுரூபமா யம்மலையிருக்கக்கண்டு
பிரமனும்விஷ்ணுவப்போ பயப்பட் டொதிங்கிநின்று
என்னென்றுவப்பொழுது யியம்புவாரிருவர்களும்
ஞானக்கண்ணுடையவர்கள் காணுவதில்லாமல்
ஈனக்கண்ணுடையவர்கள் காணவரிதாகும்
நம்முடையப்பரமசிவன் னறிவுசொரூபமென்றும்
கண்களுக்குயெட்டாத தூரம்வளர்ந்தோங்கும்
இயம்பமுடியாத யிம்மலையைத்தான்பார்த்தும்
துன்பமுடையவராய்த் தானந்தயிருவர்களும்
அடியாவதுயலது முடியாவதுகேளும்
அரிந்துவருபவரே யவரேபெரியோரென்று
ஒருவர்க்கொருவர்சொல்லிக் கொண்டுயிருக்கையிலே
அப்போதுத்தானுமல்லோ சர்ப்பசயனனரும்
ஸ்ரீமகாவிஷ்ணுவவர் சிந்தைகூர்ந்துயேதுரைப்பார்
இந்தமலையடியை யானறிந்துவாரேனென்றார்
அப்போதுபிரமதேவன் அடவாகயேதுரைப்பான்
இந்தமலையின்முடி யானறிந்துவாரேனென்றான்
இப்படிக்காகவல்லோ யிருவருஞ்சபதமிட்டு
விஷ்ணுவவர்வராகமதாய் விளங்கவே வடிவெடுத்தார்

அயனவன் அன்னபட்சி யாகவடிவெடுத்தான்
இருவரும்வடிவெடுத்து எழிலாகவப்பொழுது
ஆதிசேஷன்தாங்குகின்ற அடவாகும்பூமிதன்னை
அறைநொடிக்குள்ளாக ஆயிரங்காதந்துளைத்தும்
விஷ்ணுவுந்தானுமல்லோ விரைவாகத் தான்போனார்
அரைக்ஷணத்திற்குள்ளாக ஆயிரங்காதம்பரந்து
அயனுமேயாகாயம் ஆவலோடுப்போனான்

விஷ்ணுவு பூமியைத் துளைத்துக்கொண்டுப் போகுதல்.

இப்படிக்காகவல்லோ யிருவரும்போகையிலே
விஷ்ணுவர்க்கீழாக விளங்கவேபோகின்றது
எப்படிக்காகவல்லோ யிருந்ததென்றால்கேளும்
அம்மலைதங்கமய ராட்டணப் பூட்டைப்போலும் [ம்
அதிலிரைக்கக்கட்டியதோர் நீலரத்தினதொட்டிபோலு
முத்திழைத்தத்தோண்டிபோலுஞ் சுத்தமுடனிருந்தன
வராகவடிவெடுத்த வைகுந்தவாசகரும் [வாம்
கீழேழுலோகமதைக் கிண்டித்துளைத்துச்சென்று
மாவலிசக்கிரவர்த்தி காவலிலேயிருக்கின்ற
போகவதிபட்டணத்தைப் புகழாகத்தான்தாண்டி
அப்புரம்போகையிலே அறியவே சொல்குரேன்கேள்
தேவர்கள்தான்வணங்கும் பிரமசொரூபமுள்ள
ஆடைகேசுரமதை யன்பாகத்தானுங்கண்டு
கையாலுஞ்சிரத்தாலுங் களிப்புடனேவணங்கி
முன்னமேமூன்றுலகை முசியாதளந்தவரும்
ஏழுலகத்தானளந்து யீசனடிக்காணுதானார்
இப்படிக்குத்தேடுகின்ற யெழிலானக்காலமதில் [ண்டும்
வளர்பிரைப்போல்நாளுக்குநாள் வளர்ச்சியுற்ற கொம்பிர
தேய்ப்பிரைப்போல்குறைந்து தேய்ந்துமயங்கினவாம்
அப்போதுவிஷ்ணுவவர் யாராத்துயரங்கொண்டும்
நூறுவருஷகாலந் தேடியுங்காணுமல்
பின்புதெளிவுவந்து பெருமாளுமாலோசித்து
சிவனுடையச்செயலென்று சித்தத்திலேநினைத்து
அன்பாகவப்பொழுது அரனுரைத்தியானஞ்செய்து
இளைப்பும்சலிப்புமது யில்லாமற்றுனீங்கி
கீழேழுலகமதைக் கடந்துப்பூலோகம்வந்து
அக்கினிமலையடியில் அன்பாகவந்துநின்று
என்னயோசனையது எம்பெருமாள்செய்யலுற்றார்

அயனிந்தமலைமுடியை யறியவேதான்மாட்டான்
என்று நிட்சயஞ்செய்து யெழில்மாலனந்தவரும்
பரமசிவன்தனையும் பலதரம்வந்தனஞ்செய்து
உளமதுத்தானுருகிப் பரவினர்விஷ்ணுமவர்

ஆகாயமேகின பிரமனுடையக் கதை கூறுதல்.

இந்தப்பிரகாரம் இங்கிருக்கவிஷ்ணுவவர்
அக்கினிமலைமுடியை யறிவனென்று முன்னமேதான்
அன்னபட்சிரூபெடுத்து ஆகாயம்போனபிரமன்
அரைக்ஷணத்திலாயிரங் காதவழியாய்பரந்தும்
அண்டகோளமதனை யடவாகத்தான்கிழித்து
நூறுயிரவருஷம் தேடியேமனதுவேர்த்து
எத்தனை நூறுயிரங் காதவழிப்போய்ப்பார்த்தாலும்
முதல்பார்த்தவைபோலவே முற்றுமிருக்கக்கண்டு
அன்னமாய்ப்போனபிரமன் அகமது தான்வேர்த்து
உற்றசிரகனைத்தும் வொடிந்துமிகப்போயின
விசையுமடங்கியல்லோ வேர்த்துமுகம்வாடி
பெருகியதுக்கமொடுப் பெருமூச்சுத்தானும்விட்டு
மனக்குறையைச்சொல்வதற்கு மங்கொருவரில்லாமல்
ஒண்டிவொருவனாக நின்றுபிரமனப்பொழுதும்
சிலவற்றைமனதிலெண்ணி சிந்தைமிகக்கலங்கி
அக்கினிமலையடியை யரிந்திருப்பானோவிஷ்ணுவும்
தேடிபோய்கொஞ்சந்தூரம் திரும்பிவந்திருப்பானோ
யென்னமோவரியேனென்று ஏங்கிமனம்வாடி
தீயிலிட்டமெழுகதுபோல் தியங்கிபிரமனேதுரைப்பான்
இம்மலையைச்சிவனென்று யானறியாமற்போனேன்
பகைத்துக்கொண்டவிஷ்ணுவையு முறவுகொள்ளாமற்
என்னுடையசிறியபுத்தி யியம்பியதனாலேயோ[போனேன்
பூர்வத்தில்நான்செய்த பாவமதனாலேயோ
விளைந்ததுவென்றுரைத்து விசனங்கள்தானடைந்தும்
எண்ணாதுமெண்ணியல்லோ பிரமனு மேதுரைப்பான்
இத்தனைத்தூரமது யேகியேதேடிவந்தும்
முடியையறியாமல் மூளையுங்குலையலானேன் [போ
விஷ்ணுவின்தன்னிடத்தில் விளங்கவே சென்றுமிப்
பார்த்தேனென்றுபொய்சொன்னால்பக்கதுணையுமில்லை

என்றுவிசனமிட்டு ஏங்கியயன் நிற்கையிலே
அந்தச்சமயமதில் ஆகாயந்தனிலிருந்து
தாழமடலொன்றுத் தவரியிரங்கப்பார்த்தான்
அப்போதுபிரமதேவன் அதிகசந்தோஷமாகி
இந்தநல்லத்தாழமடல் எங்கிருந்துவருகுதென்று
ஆலோசிக்குமுன்னே அந்தவோர்தாழமடல்
பிரமனுக்குச்சமீபமாக புகழாகத்தானும்வர
அப்போதயனாறும் அதனைக்கையால்பிடித்தான்
பிடித்தவுடன்தாழம்பூ பிரமனிடமேதுரைக்கும்
சிவனுடையச்சிரமதனில்சீராகநானிருந்தும்
தவரிவிழுந்தெலவோ தடமாடிமெய்சோர்ந்து [ன்ன
வருத்தப்பட்டுயான்வாரேன் மடக்கியென்னை பிடிப்பதெ
சீக்கிரத்திலென்னைவிடும்செல்லவேணு மென்றுரைக்க
அம்மொழியைக்கேட்டு அயனவனுமேதுரைப்பான்
அழகானத்தாழம்பூவே யரையுமென் மொழிகேளும்
எங்கிருந்துயிங்குவந்தாய் எனக்கரியவுரையுமென்றார்
அந்தமொழிகேட்டு அழகானத்தாழம்பூவும்
அயனுரைநோக்கியல்லோ அப்போதுயேதுரைக்கும்
அரியயன்காணாத ஆதிசிவன்முடிமேல்
பிரியமுடன்வீற்றிருக்கும் புகழானதாழம்பூயான்
தவரிவிழுந்தெலவோ தான்வாரேன் நானுமிப்போ
கொன்றைமாலையணிந்த சுவாமிமுடிமேலிருந்தும்
நானுந்தவரிவிழுந்து நார்ப்பதினாயிரவருஷம்
காணவேகாலமது கடந்தெல்லோயிங்குவந்தேன்
இன்னமும்பூமியைநான் எழிலாகக்காணவில்லை
அதிகவருத்தத்தோடு யானும்வருகின்றேனிப்போ
என்னைப்பிடிக்கவேண்டா மிட்சணமேவிட்டுவிடும்
என்றெல்லோதாழம்பூவும் மியம்பிடவே யப்பொழுது
கேட்டெல்லோபிரமனவன் கீர்த்தியுட னப்பொழுது
சுவாமியைத்தேடுவதை தானுமவன்வெறுத்தும்
சித்தமுடனப்பொழுது சிலவார்த்தை யேதுரைப்பான்
எந்தன்சமீபமதில் எழிலாகவந்தபூவே
என்யெண்ணம்முடியும்படி எனக்குத்துணை யாயிருந்து
இன்னமுநான்தேடி ஏங்கியலையாமல்
எந்தன்வருத்தந்தன்னை எழிலாகநீக்கினால்நீ
உன்னைப்போல்வுயிர்போன்ற வுரவுதுணைவேறில்லை
அன்னியனுநானல்ல அன்னபட்சியுமல்ல

என்பெயரோபிரமன் எழிலாக நீயறிவாய்
நானும்விஷ்ணுவுங்கூடி நண்ணியேசபதமிட்டு
அக்கினிமலையினுட அடிமுடியைக்காணவென்றும்
இந்தமலையளவை யறிந்துக்கொள்ளவெண்ணியும்
பூமியைத்தேடிக்கொண்டு போனானேவிஷ்ணுவுந்தான்
பாவியாகியயானும் பாரமலைமுடியை
காணவெகுகாலம் கருதியேதேடியுமே
இன்னமுங்காணமல் ஏங்கித்தவிக்குறேனுன்
ஆதியோடந்தமாக யறியவே நீயும்நன்றாய்
நடந்தசெய்தியிதுதான் நலமுள்ளதாழம்பூவே
அதைக்குறித்துப்பேசுவதா லாவதுவொன்றுமில்லை
பெருமைப்பொருந்தியவுன் புகழான நல்வரவால்
நினைத்தக்காரியமுடிந்தால் நேராகுமெந்தனுக்கு
அரியப்பூமியளந்த யந்தநல்லவிஷ்ணுவுடன்
பகையதுக்கொண்டெலவோ பரவையுருவெடுத்து
இந்தநல்லப்பிரமதேவன் யெழிலாகவேபறந்து
சிவனுடையமுடியறிந்து சிரப்புடன் வந்தானென்று
எந்தனுக்குநீசாக்ஷி எடுத்துவுரைக்கவேண்டும்
என்றுரைத்துப்பிரமதேவ னின்னமு மேதுசொல்வான்
கேளாவோய்தாழம்பூ கீர்த்தியுள்ளயிம்மொழியை
வஞ்சனைத்தொழிலென்று வைத்துநீதள்ளாதே
யாதோவொருதுன்பமடைந்தவர்க்குசொல்லுவன்கேள்
உயிர்ச்சேதம்வருமானல் வுகந்தெல்லோயவர்களுக்கு
அதைதப்பிவைக்கும்படி யானதோர்முயர்ச்சியுடன்
பெரிதானப்பொய்யதனை பேசாமற்றானுமேதான்
பயப்பட்டுவோர்வார்த்தை பழியாகச் சொல்வதெல்லாம்
வளமாகயான்சொன்ன வார்த்தைக்கோர்பயமுமில்லை
அன்பன்சினேகன்வார்த்தை யடவாய்விரும்பினவர்
விஷத்தையுமீந்தாலும் விரும்பித்தின்ன யிசைவார்
பரமசிவன்முடியில் பரிவாகவாழுகின்ற
அழகானதாழம்பூவே யரையுமென்மொழியைநம்பு
வேரொருயாலோசனை எண்ணங்கள் செய்யவேண்டாம்
இதற்குடன்பட்டுநீயும் மியம்புவாயென்றுசொல்ல
அம்மொழித்தான்கேட்டு அழகானத்தாழம்பூவும்
அயனுடையவார்த்தைக்கு அடவாகத் தானிசைந்து
ஆகாயந்தன்னைவிட்டு அதிசீக்கிரமாகவப்போ

பிரமனும்பூவுமாகப் பூமியிலேயிறங்கி
விஷ்ணுவிடமாக வேந்தனும்வந்துசேர்ந்தான்

விஷ்ணுவினிடம் பிரமன்வந்து

பரமசிவன்முடியைக் கண்டேனெனக்கூறல்.

சேர்ந்தெல்லோபிரமனுமே சேதியதுயேதுசொல்வான்
விஷ்ணுவேயென்னுடையவிளங்கும்நல்வரவைக்கேளு[ம்
நூறுயிரங்காதம் நொடியிலேயான்பரந்தும்
எல்லோர்க்குமாதியான யீசனுடமுடியை [ன்
பரிவாகநானுமிப்போ பார்த்துவந்தேனென்றுரைத்தா
அருகிருந்ததாழம்பூவும் அடவாகயேதுரைக்கும்
அயனுமேயரன்முடியை யரிந்துவந்தது நிசந்தான்
பக்கத்தில்நானிருந்துப் பார்த்துவந்தேனென்றுரைக்க
அயனுறுஞ்சந்தோஷித்து அன்பாகநிற்கையிலே
அக்கினிமலையதுவும் அட்சணத்தில்தானுமல்லோ
பாரயிடிபோலே படீலென்றுமேவெடிக்க
வெடித்ததோர்சத்தத்தாலே ஈரேழுலகிலுள்ள
தேவர்களும்ராட்சதரும் திடுக்கிட்டுவுயர்சோர்ந்தார்
திக்கிலுள்ளயானைகளும் ரத்தங்களைக்கக்கினவாம்
வானத்துப்பிரகாசம் வழிந்துமழுங்கினவாம்
முருக்கம்பூயிதழதுவும் கருக்கும்படியாகவும்
சிவந்தநிரமானச் சிவபிரான்தன்னொளியும்
விபூதியினாலுமப்போ வெளுத்துமேதோன்றினவாம்
அக்கினிமலைவெடிப்பில் அரனுருந்தானும்நின்று
விந்தையுடனுமல்லோ விளங்கவேயெழுந்தருளி
நின்றதோர்சிவபெருமான் நிலைமைவுளயவர்முகத்தில்
முப்புரத்தைஎரித்தநகை செப்பமுடன் தோன்றினவாம்

பரமசிவன் பிரமனைநோக்கிக் கேட்குதல்.

இப்படிக்காகவல்லோ யீசரவரெழுந்தருளி
பிரமனைநோக்கியல்லோ பரமசிவனேதுரைப்பார்
அயனேகேளுன்னுடைய அகங்காரந்தன்னாலே
சொன்னமொழியுமது நன்றாயிருக்கின்றது
என்றுசொல்லிப்பரமசிவன் எழிலாநகைத்தபோது
அண்டபகிரெண்டங்களும் அடவாகத்தானுமப்போ
கிடுகிடுவென்றெலவோ கீழ்மேலும்நடுங்கினவாம்
உலகமுழுதுமல்லோ வொடிங்கியேபோயினவாம்

சூரியர்சந்திரரிட மொளியுமழுங்கினவாம்
மேகங்களேழுமல்லோ யோடிமறைந்தனவாம்
சிரந்துநிலையாக யிருக்கின்றவைகளெல்லாம்
இரந்துமடிந்தெலவோ யிதமாரிப்போயினவாம்
நிறைந்தவகைகளெல்லாங் குறைந்துமேபோயினவாம்
குறைந்தவகைகளெல்லாம் நிறைந்துவிளங்கினவாம்
திரைகூட்டமானதொரு திக்குகளலைந்தனவாம்
காணும்மரங்களெல்லாங் கருந்தெரிந்துப்போயினவாம்
அப்போதுதேவரெல்லாம் அடவாக யேதுசொல்வார்
இன்றேபிரமதேவன் ஈடழிந்துப் போனனென்றும்
பூமிபள்ளமாகும்படி புஷ்பங்களைப்பொழிந்தார்
அப்போதுவிஷ்ணுவிற்கு அதிகசந்தோஷமாச்சு
பிரமனுக்குமுன்னிருந்த ஆங்காரமானவிருள்
அப்போதுத்தானுமல்லோ அடவாக நீங்கிப்போச்சு
தெளிவையடைந்திருந்தத் திருமாலுந்தானுமப்போ
அக்கினிமலையினிட யருகாகத்தானிருந்தும்
எழுந்தருளித்தானுமல்லோ யிதமாகவப்பொழுதும்
பரமசிவந்தனையும் பாடிவந்தனஞ் செய்தார்
பரவசங்கொண்டெலவோ பாரளந்தோன்தானுமப்போ
நாலுதிக்குமோடி நலமாகக்கூத்தாடியும்
அரியவேயாவராலும் அளவிடக்கூடாதயித்த
சுவாமியைக்கண்டேனென்று தாமவருஞ்சந்தோஷித்து
என்னவரங்கேட்போ மெம்பெருமாள்தானுமப்போ
அடவாகத்தானுமல்லோ ஆலோசனைகள்செய்தார்
இப்படிக்காகவல்லோ யிருந்துமே விஷ்ணுவவர்
மிகுந்தபத்தியினலே மெய்யதுத்தானுரிகி
இருக்குமடுமைதிரத்தை யீஸ்வரனுர்தாமரிந்து
கேட்டவரங்களெல்லாங் கிருபையுடன்தானளித்து
அன்பாகவிஷ்ணுவிற்கு அனுக்கிரகஞ்செய்தபின்பு
பிரமனுமப்பொழுதுப் புகழாகவரங்கேட்க
அப்போதுபரமனுக்கு அதிககோபந்தானுகி
பிரமனைப்பார்த்தெலவோ பரமசிவ னேதுரைப்பார்
ஆங்காரங்கொண்டெல்லோ அயனே நீபொய்சொன்னுய்
இன்றுமுதலுந்தனுக்கு யெழிலானவுலகமதில்
கோவிலுமில்லாமல் கோரும்பூசையில்லாமல்
போகக்கடவது மல்லாமலின்னமுங்கேள்
பூலோகந்தன்னிலே பிராமணனுய்நீபிரந்து

புலச்சித்தனைச்சேர்ந்து பிள்ளைகளேழும்பெற்று
கானகத்திலேயெழுந்து களிப்புடன்வந்தையானால்
எப்போதும்போலுனக்கு யளிப்பேன்பிரமபட்டம்
என்றெல்லோபிரமனுக்கு எழில்சாபமிட்டுபின்பு
தாழம்பூதனையழைத்து தர்ப்பரனுரேதுரைப்பார்
பிரமனோடுநீசேர்ந்துப் பொய்யதுச் சொன்னதினால்
பயமில்லாப்பொய்சாட்சி பதரியுரைத்ததினால்
இன்றுமுதலுந்தனையான் யெடுத்துமேதான் நீண்டே
காசினியிலேபிரந்துக் கழுதைபுட்டை யாய்ப்போவாய்
என்றெல்லோசாபமது யிட்டாரேதாழம்படற்கு

பிரமதேவன் சுவாமியைத் தோத்தரித்தல்.

அரநாரின்கோபமதை யரிந்தெல்லோபிரமதேவன்
ஏக்கமதுக்கொண்டு யேங்கிமனங்கலங்கி
பிரமனுடதேகமதுப் பூமியிலேதான்படிய
வாகாகத்தான்விழுந்து வந்தனங்கள்செய்துமப்போ
அரனுரைத்தோத்திரங்கள் அன்பாகசெய்யலுற்றான்
நீரதுமுடிய நெருப்பைபொத்தசுவாமியே நீர்
சண்டாளத்தத்துவங்கள் சதியாகவேபூண்டும்
ஆணவமென்கின்ற அசடானச்செடிமூடி
அவிவேகங்கொண்டிருக்கு மடியேனொருபொருட்
உருமையுடையவரே யுத்தமரேயுமாபதியே [டோ
அகண்டவெளியானவரே அன்பர்க்குகந்தவரே
நன்றாய்த்தெளிவருளும் நான்குவேதமானவரே
நான்குவேதத்தினிட யந்தரங்கமானவரே
ஓதவேசகலமும் ஒப்பற்றமுதலானவரே
குழந்தையாகியயென்மேல் கோபிக்கவேண்டாஞ்சுவாமி
எல்லாநதிகள் நீரும் யேகியொன்றாய்க்கலந்து
ஏழுசமுத்திரமும் யேகமாய்த்தான்காய்ந்து
வென்னீராய்ச்சுட்டாக்கால்யாற்றவோர்சலமுமுண்டோ
உமக்கேயிப்படிப்பட்ட யுற்றதோர்கோபம்வந்தால்
வாழுஞ்சீவராசிகள் வையகத்திலெவ்வார்பிழைக்கும்
அலைகடலிலேபிரந்த ஆலகாலவிஷத்தை
அள்ளியுண்டமூர்த்தியே அடியேன்மேலிப்பொழுது
கொடுமையாயென்மீதுக் கோபித்துக்கொள்ளாதே
மூன்றும்பிரையாயும் பூரணச்சந்திரனும்
பெண்ணுவுமாணுவும் புஷ்பமாயுந்தேனும்

மலையாயும்மகமேராயும் மாதவப்பொருளாயும்
கிருபாவிருட்சத்தைப்போல் கீர்த்திப்பொழிகின்ற
மேலாகத்தான்மொழியும் மேகங்கள்தானும்
நவிலுகின்றசொல்லாயும் நாகமதுவாகியும்
மற்றும்னுவிதமாய் மருவுப்ரூபமாகியும்
இருக்கின்றமூர்த்தியேயுமக்குமுரையோமுரையோ[டாம்
என்னைக்கோபிக்கவேண்டாம் அடியேனைசபிக்கவேண்
மிருந்ததோர்வெட்பமதை மேலாகக்கொடுக்கின்ற
புஷ்பபாணங்களையும் புகழாகத்தானுடைய
மன்மதன்போலொத்த தேகமிதுவல்லவே
தாருகாவனத்துரிஷி தான்விடயியம்பினதோர்
கலையுமாருபோன்ற மத்தகத்தையுமுடைய
கோபமாகியபெருங் குஞ்சரமுமல்லவே
அந்தரிஷிகள்விட்ட யருஞ்சிகப்பக்கிளியலவே
கொலைசெய்யுந்தொழிலுடைய கூற்றுவனுமலவே
தீம்பாகநின்றதொரு திருபுரமுந்தானெலவே
எவ்வளவுஉமக்குநான் ஈசாகோபஞ்செய்யவேண்டாம்
யாவராலுமறியாத யன்பானவுன்முடியை
அரிகிறேனென்றபோதே யானேன்பரவையுரு
சிக்கியதுக்கமுடன் சிருமையுந்தானடைந்த
என்மீதில்கிருபைசெய்யும் யீசாவென்றேயுரைத்து
விசனப்பட்டுவயனும் வேண்டித்துதிக்கையிலே

சிவபெருமான் பிரமதேவனை

அனுக்கிரகித்தல்:

அப்போதுப்பரமசிவன் யருள்கூர்ந்து மனங்குளிர்ந்து
சந்தோஷந்தானுகிச் சதுர்முகனுக்கேதுரைப்பார்
கேளாய்வோய்பிரமனே கீர்த்தியுள்ளயென்மொழியை
இனிமேல்நீபயப்படாதே எழிலாகசொல்வதைக்கேள்
பூமியில்பிராமணர்க்கு புகழாச்செய்யும்பூசை
உன்பூசையாகக்கொண்டு யுளமதுத்தான்களித்து
பாப்பானுய்நீபிரந்து பரச்சித்தனைச்சேர்ந்து
ஏழுபிள்ளைகள்பெற்று எரிந்துவிட்டுகானகத்தில்
என்னைநினைந்தையானல் யெழிலாகவந்துனக்கு
காட்சிக்கொடுக்கின்றேன் களிப்பாகயதின்பின்பு
எப்போதும்போலேநீ யெழில்பிரமயுலகையாண்டு
ஏழுலகமதனை எப்போதும்போல்படையும்

என்றெல்லோயீஸ்வரனுர் யெழிலாகவருளிச்செய்தார்
அப்போது அயன் நாவில் அன்பாகத்தான்விளங்கும்
சரஸ்வதியாள் தானுமல்லோ சடுக்கென்றுதான்குதித்து
பூமியிலேதானிரங்கி பரமனையுந்தோத்தரித்து
கிளிபோன்றவாய்திறந்துக் கீர்த்தியுடனேதுகேட்பாள்
அயனுர்வருமளவும் யானெங்குவீற்றிருப்பேன்
எனக்கருள்செய்யுமென்று யீஸ்வரனைக்கேட்கையிலே
கேட்டெல்லோபரமசிவன் கலைவாணிக்கேதுரைப்பார்
அயனுடையநாவினிலே யமர்ந்துமே நீயிருந்து
பொய்யையுரைத்ததினுல் புகலுவேன் சாபமுந்தான்
பூலோகந்தன்னிலே நீ புலச்சியாய் நீபிறந்தும்
பாப்பானை நீபுணர்ந்து பாலரேழும்பெற்றெடுத்து
கானகத்திலெறிந்துவிட்டு களிப்புடனெனை நினைந்தால்
எப்போதும்போலாக யெழில்மறைபிரமனுக்கு
பாரியாளாகியல்லோ பட்சமுடன்வாழ்ந்திருப்பாய்
என்றெல்லோயீஸ்வரனுர் யிதமாகத்தானுரைத்து
அனைவருக்கும்விடையதுவும் அரனுருந்தான்கொடுத்து
அப்பால்நடக்குங்கதை யரைகுவேன்மார்க்கண்டரே

பரமசிவனுரைத்தவண்ணம்

அவரவர்கள் யேகுதல்.

மாயன்பெருமாளும் மகிழ்ச்சியுடனப்பொழுது
வட்டமாங்கெருடனேறி வைகுந்தம்போய்ச்சேர்ந்தார்
அரனிட்டசாபப்படி அயனுறுஞ்சரஸ்வதியும்
பூலோகந்தன்னிலேயும் புகழாகத்தானும்வந்து
அயனுருமப்பொழுது அன்பாகத்தானுமல்லோ
புத்தூர்அக்கிராரமதில் புகழாகத்தான்விளங்கும்
பேராழிமுனியென்னும் பிராமணனுர்தன்மனைவி
சேஷியென்னுமாது சிரந்ததோர்கெர்ப்பமதில்
அயனுரும்போயலவோ யடவாகத்தான்தரித்து
பத்துமாதமுஞ்சென்று பரிவாகத் தானுமல்லோ
சேஷியெனுமாதுச் செல்வனையுமீன்றெடுத்தாள்
அப்போதுபேருழி முனிவன்சந்தோஷமாகி
அன்பாகப்பாலனுக்கு பட்சமுடனப்பொழுதும்
பகவனென்னும்பேறு பரிவாகத்தானுமிட்டு
ஜாதகங்களெழுதியல்லோ சதுருடன்பார்க்கையிலே
பதினுறுவயதினிலே பாலன்யிவன்தானும்

புலச்சியைச்சேருவதாய்ப் பலனதுத்தானிருக்க
கண்டெல்லோபேருழி முனிகலங்கிமனம்வாடி
தவமாதவமிருந்துத் தான்பெற்றப்பாலனுக்கு
இப்படிக்கும்விதியும் யெழுதினானேபிரமனென்று
எண்ணுதுமெண்ணியவன் யேங்கிமனம்வாடி
சேஷியந்தமனையாளை சீக்கிரமாய்த்தானழைத்து
பாலனுடப்பலனைப் பரிவாகத்தானுரைத்தும்
மனையாளுடனேயப்போ மருமமாயேதுரைப்பான்
இந்தநல்லபாவமொழி யெழிலாகவிப்பொழுதும்
காசியாத்திரைக்குநான் கனமுடன்போய்வாரேன்
மைந்தனைவைத்து மகிட்சியுட நீயிருந்து
வாகாகவுரிதிசொல்லி விடைகளதுப் பெற்றுக்கொண்டு
பேருழிமுனியவனும் போனானேகாசியாத்திரை
சேஷியந்தப்பாலகனைச் சீராட்டிவளர்த்துவாராள்
இப்படிபகவனுமே எழிலாயிங்குவளர
வாணியந்தசரஸ்வதி வாகாகவப்பொழுதும்
பாண்டியன்தேசமதில் பரிவாகத்தான்விளங்கும்
சித்தூருசேரியிலே சிரப்புற்றுத்தான்வாழும்
வேம்பாந்தோட்டிமனைவி வேதியவள்தன்வயற்றில்
சரஸ்வதியாள்தானுமல்லோ சதுராகப்போய்பிரந்து
ஆதியெனும்பேர்வகுத்து அங்கவள்வளர்ந்துவாராள்
இப்படிக்காகவல்லோ யிருக்கின்றநாளையிலே
பாலநந்தபகவனையும் பள்ளிக்கூடத்தில்வைத்து
பரிவாகக்கலைகள்யாவும் படித்துவருகையிலே
அப்போதொருநாளு மந்தப்பள்ளிக்கூடத்தில்
தகப்பனில்லாப்பிள்ளையென்று தலையிலடித்தார்கள்
அப்போதுபகவனுக்கு ஆயாசந்தானுகியும்
தாயாரிடத்தில்வந்துத் தனஞ்சயனேதுகேட்பான்
என்னுடையத்தகப்ப னெங்கே நீசொல்லுமென்றான்
அப்போதுசேஷியறும் அருஞ்சுதனுக்கேதுரைப்பாள்
பாலா நீபிறந்தபலன் பஞ்சாங்கம்பார்க்கையிலே
பதினாறுவயதில் நீயும் பரச்சியைச்சேருவதால்
ஜாதகத்தில்தானிருக்கக் கண்டெல்லோ வுந்தன்தந்தை
இப்பாவந்தானொழிய எழில்காசித்தனக்குச்சென்றார்
என்றுமேதாயாரும் எடுத்துவுரைக்கையிலே
மைந்தனந்தபகவன்கேட்டு மனமதுமிகவாடி
அம்மணியிப்பாவ மகலவேயானுமிப்போ

தந்தைபோனகாசிக்குத் தான்போயிவாரேனென்ன
அந்தமொழிகேட்டு அன்னையந்தசேஷியவள்
போகவேண்டாமென்று புத்திசொல்லிமிகதடுத்தும்
சற்றுமவன்கேளாமல் சதுர்முகனும்பகவனவன்
காசிப்பதிதேடிக் கடுகநடக்கையிலே
காணவேவழியிலுள்ளக் காடுசெடிதாண்டி
கானாறுமடுதாண்டிக் களிப்புடன்வருகையிலே
பாண்டியதேசமதைப் பரிவாகத்தானடுத்தும்
வடிவாகப்பகவனுமே வருகின்றவப்பொழுது
அரசநந்தப்பாண்டியனும் அன்பாயிவனைக்கண்டு
சேவகரைவிட்டெலவோ சித்தமுடனழையுமென்ன
அப்படியேசேவகர்கள் அடவாகவோடிவந்து
பகவனையழைத்துச்சென்று பாண்டியனருகில்விட்டார்
பாண்டியனுமப்பொழுது பகவனையுமேதுகேட்பார்
எங்கிருந்துயெங்குபோருய் எனக்கறியக்கூறுமென்ருர்
அம்மொழிபகவன்கேட்டு அரசனிடமேதுரைப்பான்
பதினுருவயதிலேநான் பரச்சியைச்சேருவதாய்
ஜாதகமெந்தனுக்குச் சதியாகநேர்ந்ததினுல்
அப்பாவந்தானெழிய அருள்காசிபோரேனென்ன
அம்மொழித்தான்கேட்டு அரசனந்தப் பாண்டியனும்
பகவனைநோக்கியல்லோ பண்பாகயேதுரைப்பான்
பாலவயதுனக்குப் பதினுருய்தோன்றுகுது
இந்நவயதினிலே எழில்காசிப்போரேனென்ருய்
வாட்டைவழிதனிலே வருவாரும்போவாருண்டு
கடக்கும்வழிதனிலே கன்னியர்கள்மெத்தவுண்டு
காமமதுவந்துமூடிக் கண்ணையிருட்டிவிடும்
நேமமதுதவரி நித்தனைக்குமாளாவாய்
ஆனப்படியினுலே யரைகுவேன்கேள்பகவனே நீ
இந்தநல்லமண்டபத்தி லெழிலானயாகமொன்று
பத்தியொடுத்தான்வளர்த்தி பகவானைத்தோத்தரித்து
பாவமதைவிலக்கிக்கொள்ளு பகவனேயென்றுரைக்க
அம்மொழிக்குச்சம்மதிக்க அருமறைபகவனுமே
பாண்டியனுமனமகிழ்ந்து பட்சமுடனட்சணமே
சேவகரைத்தானழைத்து சித்தமுடனேதுரைப்பார்
யாகத்திற்குறியதொரு சாமான்களுள்ளதெல்லாம்
விரைவாககொண்டுவந்து வேழ்விக்குகொடுங்களென்ன
அரசனுரைத்தவண்ணம் அடைவாகத் தானும்போ

வேழ்விக்குவுண்டான விளங்கியசாமான்கள்
கொப்பெனவேகொண்டுவந்து கூசாமல்சேகுவரும்
யாகஞ்செய்மண்டபத்தி லன்பாகச்சேர்த்தார்கள்
சமுத்தோடுதெர்ப்பைதனை சதுராகக்கொண்டுவர
வேம்பாந்தோட்டிதன்னை விரைவாகத்தானழைத்து
உத்திரவுதானளித்தார் வுருதியுடன்சேகவரும்
அப்படியேநல்லதென்று அவனுந்தன்மனைக்கேகி
வீட்டுக்கோர்ஆள்களையும் விரைவாயழைக்கவந்தார்
தன்வீட்டிலாளிலாமல் தவிக்கையிலேவேமாந்தோட்டி
ஆதியெனும்பெண்ணவளும் அப்பனிடமோடிவந்து
நம்பளிடமுரையாளுக்கு நான்போரேன் பயப்படாதே
என்றுரைக்கவேம்பாந்தோட்டி யிருபுஜமும்பூரித்து
ஆதியரைக்கூட்டியல்லோ யவர்களுடன்தானனுப்ப
கூடியனைவர்களுங் கூசாமல்வார்த்தையாடி
கானகத்தைநாடியல்லோ களிப்புடனே போய்சேர்ந்து
வேழ்விக்குறியதொரு விரகெல்லாஞ்சேகரித்து
சதுராகச்சுமைகள்கட்டி சட்டமூடனவரவர்கள்
தலைமீதுதானெடுத்துத் தையலந்தஆதியுடன்
ஏலங்கள்பாடியல்லோ யிசைந்துவருகையிலே
கானஅந்திப்பொழுதாச்சு கதிரவனும்போய்மறைந்தான்
அந்தச்சமையமதி லடவாகத்தானுமல்லோ
சப்தமேகங்களங்கே சதுராய்வளைத்துக்கொண்டு
காத்தடிமின்னலுடன் கனத்தமழைபொழிய
ஒட்டம்நடையுமாக வோடிவந்தயனைவர்களும்
அவரவர்சுமைகளையு மன்பாகவப்பொழுதும்
சேர்த்தெல்லோமண்டபத்தில் சேரிக்குப்போனார்கள்
ஆதியென்னும்பெண்ணவளு மச்சுமைமையைப்போட்டு
மழைதனக்குஅஞ்சியல்லோ மண்டபத்திலிருந்தாள்

பகவன் யாகம் வளர்த்தல்.

இப்படியாகவல்லோ யிருக்குமந்தவேளையிலே
பகவனெனும்பாப்பானும் பரிவாகவப்பொழுது
அரனுரைப்பூசைசெய்ய யாகமதுவளர்த்தி
பாவங்கள்தான் துலையப் பகவானைத்தோத்தரித்து
புலச்சியைச்சேராதிருக்க பெரும்யாகமேவளர்த்தி
ஆவினுடநெய்விட்டு யரன்பூசைசெய்கையிலே
யாகவெளிச்சத்திலே ஆதியெனும்பெண்ணைக்கண்டு

கடுகெனவேயோடிவந்துக் கன்னியரைத்தான்பார்த்து
இருகண்ணுந்தானிருண்டு யிவளாரோவென்றுஎண்ணி
காமரதிதானோ கைலைவாழ்பார்வதியோ
பூமகளிவள்தானோ பூவைசந்திரமதியோ
ஆரென்றும்நானறியே யரம்பையோவூர்வசியோ
இந்தயீசானியத்தில் யெழிலாக நிற்கின்றவள்
என்றுபகவனுமே யேந்திழைமேலிச்சைவைத்து
யாகத்தைத்தானிருத்திப் போகத்திற்கிச்சைவைத்து
ஆதியருகினிலே யன்பாகத்தானும்வந்து
ஈரவஸ்திரமதனை ஏந்திழையைக்களையச்சொல்லி
தன்னுடையவேட்டிதனை தையலருக்கேகொடுத்து
உடுத்திக்கொள்ளச்சொல்லி யுத்தமனும்மப்பொழுது
காமவெரியாலே கன்னியரைப்போய்தழுவிக்
கட்டியணைந்தெலவோ கனிவாயில்முத்தமிட்டு
மதனும்ரதிபோலே மருவிசுகித்தார்கள்
காமவெரிதெளிந்து காளையந்தபகவனுமே
கன்னிமுகம்பார்த்துக் களிப்புடனே துகேட்பான்
எந்தவூருயெந்தநாடு எங்கிருந்துயிங்குவந்தாய் [ன்ன
உன்னுடையப்பேருமென்ன உன்தாய்தந்தைபேருமெ
அரியவே நீயுரைத்தால் யாம்போவோங் காசிக்கிப்போ
தெரியவே நீயுரைத்தால் தீவிரமாய்போவே னென்றான்

ஆதியும் பகவனும் தற்கமிடுதல்.

அந்தமொழிகேட்டு ஆதியருமே துரைப்பாள்
சாதிகுலங்கேளாமல் சரசமுடன் நீரும்வந்து
கன்னியரென்னைக்கூடி கலந்துசுகித்துவிட்டு
இப்போதுசாதிகுலம் யெந்தனையுங்கேட்கவந்தாய்
எப்படிக்குதானுரைப்பேன் யெழில்மறைவேதியரே
என்றுரைக்கவாதியுமே யேதுரைப்பான் பகவனப்போ
அதினாலேகுற்றமில்லை யறிவையேபெண்மயிலே
எப்படிக்கிருந்தாலும் யெனக்கொருதோஷமில்லை
உள்ளபடி நீயுமிப்போ யுரைத்தையேயாமானால்
கைகோர்த்துநாமிருவர் காசிக்கேயேகிடலாம்
பொழுதுவெடிந்துதானால் பாண்டியனூர்தாமறிந்தால்
ஆக்கினைகள்செய்திடுவா ரறியமிருவரையும்
சீக்கிரத்திலுரையுமடி சேரவேகாசிபோவோம்
என்றுபகவன்கேட்க யேதுரைப்பாளாதியரும்

ஆனால்கேள்மறையவரே யறைகுரேன் என்குலத்தை[ட்டி
என்பேருஆதியாகும் யென் தகப்பன்பேர் வேப்பாந்தோ
தாய்பேருவேதியாகுந் தையலுடக்குலமிதுதான்
என்றுரைக்கப்பகவன்கேட்டு யிடிவிழுந்த மரம்போலே
பூமியிலேவிழுந்து புரண்டழுதுயே துரைப்பான்
பாதகியெனக்கென்றுப் பழிகாரி யெங்கிருந்தாய்
தாய்சொல்லைத்தவரியல்லோ தனிவழியேயானும்வந்து
பாண்டியனார்சொல்லைநம்பி பாவந்துலைக்க வென்று
யாகமதைவளர்த்தி யோகமுடிக்கையிலே
சண்டாளியிங்குவந்து சனியன்போல் நின்றுயே
எத்தனை நாளெனக்கென்று யிங்குகாத்திருந்தாயோ
எதிரில் நில்லாதேபோடி யென்றுமேகோபித்து
சட்டுவத்தைநோக்கியல்லோ சடுக்கென்றுதானடிக்க
அந்தஅடியதுவும் ஆதிநெத்தியிற்பட
இதுதான்சமையமென்று யிந்தநல்லபகவனுமே
காசிக்குத்தானோடக் காலெடுத்துவைக்கையிலே
கண்டெல்லோஆதியருங் கடுகெனவேயோடிவந்து
பகவனுடமடியைப் பற்றியிழுக்கையிலே
அப்போதுபகவனுமே யகம்வேர்த்துமுகம்வாடி
தலையிலேபோட்டவிதி தப்பாமல்நேர்ந்ததென்று
எண்ணுதுமெண்ணியல்லோ யிதமாகவேதுரைப்பான்
ஆதியெனும்பெண்மயிலே யரிவையரேசொல்குரேன்கே
பாப்பான்பழிப்பொல்லாது பாதகியெனைவிடுவாய் [ள்
அரியாமல்செய்தபிழை யனைத்தும்மனம்பொருத்து
எந்தனைவிட்டுவிடு யேகுரேன்காசிக்கென்ன
அந்தமொழிக்கேட்டு ஆதியாளேதுரைப்பாள்
கன்னியெனைகெடுத்துக் காசிக்குப்போரேனென்றீர்
அன்னீதமிதுவல்லவோ அடுக்குமோவையகத்தில்
சேரியிலென்னையினி சேர்ப்பாரோவேதியரே
நாயகரேவுன்பிறகே நானும்வாரேன்காசிக்கு
என்றுமேயாதிசொல்ல ஏதுரைப்பான்பகவனுமே
பாப்பானுடனே நீ பரச்சியும்வரலாமோ
காசிமறையவர்கள் கண்டாக்கால்கொல்வாரே
புண்ணியமாய்ப்போகுதடி போகவிடைதருவாய்
பாண்டியனரிந்தாக்கால் பழிகள்வந்துநேருமடி
என்றுரைக்கபகவனுமே யேதுசொல்வாளாதியரும்
பழிகள்வருமென்றுப் பாராமல் சொல்லவந்தாய்

ஆதியிலேயுங்கள்குரு வானதொரு வதிஷ்டரவர்
வேசியின்புத்திரனாய் விளங்கவேதான்தோன்றி
சக்கிலிப்பெண்ணைமணம் சதுராகச்செய்யலியோ
சத்தியமுனியவனும் சுத்தமுடன்பிரக்கலையோ
சங்கையில்லாமலேதான் புங்கனூர்புலச்சிதனை
சத்தியமுனியவரும் சதுராகத்தான்கூட
பராசமுனியவரும் பரிவாகப்பிரக்கலையோ
இப்படிக்குவுங்கள்குலம் யேடாகுடமாயிருக்க
என்னையும்மோசஞ்செய்து யேகவும்பார்க்கிறீரோ
வாருங்கள்சேரிக்கு வளமாக நாமும்போவோம்
என்றுரைத்துயாதியரும் யிழுக்கவேமடிபிடித்து
பகவனுமப்பொழுது பதில்சொல்லமுடியாமல்
இவளைத்தப்பித்துப்போக ஏதுவழியில்லையென்று
தர்க்கங்களாடிக்கொண்டே தானடந்தார்காசிக்கேதான்
காசித்தெருக்கோடிக் கனமாகப்போனவுடன்
பகவனும்மோசஞ்செய்ய பரிவாகமனதிலெண்ணி
ஆதியைத்தான்பார்த்து அன்பாகவேதுரைப்பான்
பெண்மயிலேயாதியரேபைங்கிளியேசொல்லுரேன்கேள்
காசித்தெருக்கோடிக் காணவேவந்துவிட்டோம்
பட்டணத்திற்குள்ளாக பரச்சிவரக்கூடாது
கண்டாலேவேதியர்கள் கொன்றுபுதைத்திடுவார்
ஆலயத்திற்குள்சென்று லரும்பாவம்வந்துவிடும்
ஆதலாலாதியரே யப்பழிநமக்குவேண்டாம்
தெருக்கோடிமூலையிலே திகழுடனேநின்றிருநீ
அரைநொடிக்குள்யான்சென்றுயாலயத்தினுட்புகுந்து
காசிவிஸ்வேசுரரைக் கண்டுதெரிசித்துவாரேன்
உன்னையென்னை உத்தமியேவிடைதாரும்
கையதுப்போட்டுத்தாரேன் கன்னியரேவிடைதாரும்
என்றெல்லோதானுரைத்து யிதமாகக்கேட்கையிலே
எண்ணறக்கற்றுமல்லோ எழுத்தரப்படித்தாலும்
பெண்புத்திப்பின்னென்றுப் பேசும்பழமொழிப்போல்
ஆதியாள்மனதிரங்கி யளிக்கவிடையுமப்போ
இதுதான்சமையமென்று யெண்ணிபகவனுமே
ஆதியரைவிட்டேலவோ யவனுமேதானேடி
காசிவிஸ்வேசுரரைக் கண்டுதெரிசித்துமல்லோ
காசிக்குவடக்கிருக்கும் கருதும்நல்லசித்தூராம்
சித்தூரக்கிராரமதில் சேர்ந்தெல்லோபகவனுமே

சனியன் தொலைந்ததென்றும் சங்கடந்தீர்ந்ததென்றும்
ஈஸ்பரன்கிருபையினு லினிபயமில்லையென்றும்
பழிகாரியாதிசள்ளை வழியில்தொலைந்ததென்றும்
இனிநமக்கோர்பயமு மில்லையென்றுமனதிலெண்ணி
அப்பையர்வீட்டிலேதான் அடவாகத்தானுமல்லோ
ஒப்பியனைவர்களும் உள்ளமிகமகிழ
ஒப்பாரிக்கொண்டெலவோ யுரிதியுடன்பகவனுமே
பிள்ளையைப்போலாக பெருமையுடன்தானுமல்லோ
அப்பையர்வீட்டிலேதா னன்புடனேவாழ்ந்திருந்தான்

ஆதி பகவன்வாராமையைக்கண்டு

காசிவீதியில் புலம்பல்.

இப்படிக்காகவல்லோ யிவனுமிருக்கையிலே
அரிவைப்பசுங்கிளியாள் ஆதியருந்தானுமல்லோ
காசிமுனைத்தெருவில் கன்னியவள் நின்றுகொண்டு
அந்திப்பொழுதளவும் நின்றகாலுங்கடுக்க
பகவன்மேல்சிந்தையதாய் பாவையருமிருந்து
பார்த்தகண்ணும்பூர்த்து வேர்த்துமுகம்வாடி
எண்ணுதுமெண்ணியல்லோ யேந்திழையாளாதியரும்
முத்துபோல்கண்ணீரை முகமெல்லாம்சோரவிட்டு
பவழம்போல்வாய்திறந்து பத்தினியாளப்பொழுது
ஏங்கிமனமுருகி ஏந்திழையாளேதுசொல்வாள்
காசிவிஸ்வேஸாயுந்தன் கபடமோயானறியேன்
தாயேவிசாலாட்சி தர்ப்பரியேயுன்செயலோ
ஏதுமறியாத ஏந்திழையாளென்னையுமே
பாண்டியதேசமதில் பரிவாகத்தானுமல்லோ
அந்தணனொருவனுமே விந்தையுடனேமாத்தி
எந்தனையுங்கெடுத்து யிட்டுகொண்டுவந்துமிப்போ
அன்னைதந்தையர்களின் ஆசையைமறக்கவைத்து
பழிகாரப்பாப்பானும் பாதகன்தானுமல்லோ
ஏதேதோயெந்தனுக்கு யிஷ்டமுடன் தானுரைத்து
உடலிரண்டுவுயிரொன்று யொற்றுமிருப்போமென்று

ஆசையெனக்குறைத்து அனியாயமாகவிப்போ
காசித்தெரிவிலென்னை கலங்கிபுலம்பவிட்டு
ஆணையுஞ்சத்தியமும் அடுக்காகத்தானுமிட்டு
கன்னியேயுனைமரவேன் கர்த்தனுடசாட்சி யென்றும்
கையதுப்போட்டுதந்து காசிக்குள்ளே நுழைந்து
எங்கையோவோடிப்போனு னின்னம்வரக்காணும்
எப்படிக்குநாமுமிந்த எழிலானகாசிதன்னில்
இருந்துப்பிழைத்திடுவோ மெவ்விடத்திலண்டிடுவோம்
பாப்பாரவீதியிலே பாவையெப்படிபுகுவோம்
என்றுமேதானுறைத்து யேந்திழையாளாதியரும்
கோடுகோடென்றெலவோ கோதையரும்புலம்பையிலே

காசி பிராமணப்பெண்கள்

ஜலத்திற்கு வருதல்.

அந்தநல்லகாசிவாழும் அந்தணர்பெண்களப்போ
வேடிக்கையாகவல்லோ விளங்கவேயவர்களுமே
ஒருவற்கொருவரவர் உல்லாசமாகப்பேசி
தங்கக்குடமெடுத்து தையலர்கள்கக்கத்தில்வைத்து
கெங்கைகரைதேடி கீர்த்தியுடன்வருகையிலே
காசிதெருகோடியிலே காணவேயப்பொழுது
அருங்கிளியாளாதியரும் அழுதுப்புலம்பும்சத்தம்
ஆரியப்பெண்களெல்லா மருஞ்செவியில் தான்கேட்டு
கன்னியாளாரோயிங்குக் கதரிப்புலம்புகிருள்
ஆகையால்நாமுமிப்போ அரிகினில் போய்பார்ப்போம்
வாருங்கடியென்று வாகாகப்பெண்களெல்லாம்
ஒருமிக்கத்தானுமல்லோ உகந்துமேகூடிவந்து
ஆதியருகினிலே யன்பாகவந்துநின்று
வேதியர்பெண்களப்போ விளங்கவேயேதுகேட்பார்
ஆரம்மாதனியேநின்று அழுதுப்புலம்புகுருய்
எந்தவூருயெந்தநாடு எங்கிருந்துயிங்குவந்தாய்
பார்க்கசிறுகன்னியாக பாவையுமிருக்கின்ருய்
என்னகுலமுனது ஏங்காமலிப்பொழுது
தெரியவேயெங்களுக்கு நீர்க்கமுடன்சொல்லுமென்ருர்

ஆதி அந்தணர்பெண்களிடம்

தன்வரலாறு கூறுதல்.

அந்தமொழிகேட்டு ஆரணங்குஆதியரும்
அந்தணர்பெண்களெல்லாம் ஆச்சரியங்கொள்ளும்படி
அன்னம்போல்வாய்திரந்து ஆதியருமேதுறைப்பாள்
என்னென்றுயென்குறையை எடுத்துவுரைப்பேனம்மா
பாண்டியதேசத்திலே பாவையரும்யான்பிறந்து
அருமையுடனேவளர்ந்து யானுமிருந்தேனம்மா
அன்னைதந்தையர்களுட ஆசையைமரக்கடித்து
அந்தணரொருவரம்மா ஆசைவார்த்தைகள்சொல்லி
என்னைமயக்கியல்லோ யென்மதியையுங்கெடுத்து
மோசவார்த்தைப்புகன்று காசிக்கழைத்துவந்து
இந்ததெருகோடியிலே என்னை யிருக்கச்சொல்லி
ஆணையுஞ்சத்தியமும் ஆனமட்டுமேசெய்து
கையதுபோட்டுத்தந்து கடுகெனவே வாரேனென்று
நல்லவசனமதைச் சொல்லியே யெந்தனுக்கு
காலையில்போனவரு மின்னம்வரக்காணோம்
பார்த்தகண்ணும்பூர்த்தெனக்கு பஞ்சடைந்துபோகுத
நின்றகாலுமெனக்கு நேர்ந்துகடுக்குதம்மா [ம்மா
அருங்காசித்தன்னிலே அனுதியாய்நின்றேனம்மா
என்றுமேயாதியரு மியம்பிப்புலம்பையிலே
அந்தணர்பெண்களெல்லா மடவாகத்தான்கேட்டு
பரிதாபப்பட்டுமல்லோ பாப்பாரப் பெண்களெல்லாம்
கூடியேயப்பொழுது கொப்பெனவே யேதுகேட்பார்
பாவையரேவுன்னுடைய பண்பானப்பேருமென்ன
அறியவேயெங்களுக்கு அன்பாயுறையுமென்ன
தெரியவேயெங்களுக்கு சீரமுடன்சொல்லுமென்ன
அப்போதுயாதியரும் அருங்கிளியா ளேதுசொல்வாள்
அம்மணிஎன்னுடைய யரும்பெயரைசொல்கிரேன்கேள்
அருமையுடனெந்தனையு மன்பாகப்பெற்றெடுத்த
தாயுந்தகப்பனுமே தான்மகிழ்ந்துயெந்தனுக்கு
ஆதியென்றுபெயருமிட்டு ஆசையுடனேயழைப்பார்

அம்மணியென்பெயர் ஆதியாளாகுமம்மா
என்றுமேயாதியரு மெடுத்துமிகவுறைக்க
வேதியஸ்திரீகளுமே விளங்கவே தான்கேட்டு
அனைவருமப்பொழுது அதிகசந்தோஷமாக
அதிலொருபிராமணப்பெண் அன்புமிகக்கூர்ந்து
ஆதியைத்தானழைத்து யறியவேயேதுறைப்பாள்
உன்னுடையத்துயரமதை உத்தமியேவிட்டுவிடு
அரனுரெழுத்ததனை யாருல்விலக்கக்கூடும்
நன்மையுந்துன்மையும் நாட்டமுடன்தானுமல்லோ
சமமாகவிருக்கையிலே சஞ்சலப்படுகுவானேன்
எல்லாஞ்சிவன்செயலென் றெண்ணியேயிப்பொழுது
என்னுடையவார்த்தைதனை யேந்திழையே தள்ளாமல்
உந்தனைவிட்டுப்போன உத்தமவேதியரும்
வாகர்கஉனைதேடி வருகின்றவரையிலுமே
எங்களிடவாத்தினிலே யேந்திழையேவந்திரம்மா
என்றவர்கள் தானழைக்க யேந்திழையாளாதியரும்
சந்தோஷமாகியல்லோ சம்மதித்துவப்பொழுது
மங்கைலட்சுமியென்னு மாதவள்தன்னுடைய
அரண்மனைதன்னிலல்லோ ஆதியும் வாழ்ந்திருந்தாள்

போது விருத்தம்.

இந்தவகையாதியரும் யெழிலாய்தானும்
இஷ்டமுடன் குப்பையர்வீட்டில்வாழ்க
தொந்தமுடன்காசி விஸ்வேசருக்கும்
துலங்கவேயுச்சவமுந் தோன்றத்தானும்
அந்தமுடன்காசிநகர் வாழும்நல்ல
அந்தணர்கள்யாவர்களு மொன்ருய்சேர்ந்து
சுந்தரமாமுற்சவங்க ளானபின்பு
சுத்தமுடனடக்கின்ற சரிதைகேளீர்.

அம்மானை.

இப்படிக்காகவல்லோ யிருக்கின்றநாளையிலே
விளங்கவேகாசிவாழும் விஸ்வேசநாதருக்கு
பிரமவுற்சவமதுப் புகழாகத்தான்வருக

காசிவாழ்வேதியர்கள் களிப்பாகத்தானுமல்லோ
அவரவர்முறைப்படியே யன்பாகத்தானுமல்லோ
பத்துநாள்உற்சவமும் பாங்காகத்தானடத்தி
வந்தவரும்படியை வாகாகத்தானுமல்லோ
பாகங்கள்தீர்த்துக்கொள்ள பாரமறையோர்கள்
ஆயிரம்வேதியரும் அடங்கலுமொன்ருக
விஸ்வேசராலயத்தில் விளங்கவேதான்கூடி
அவரவர்க்கேற்றபடி யானதோர்பாகமதை
கணக்கதுத்தான்பார்த்து களிப்புடனப்பொழுது
பங்கிட்டுத்தானுமல்லோ பணங்களையெடுத்துக்கொண்டு
போகுந்தருணமதில் புகழாகத்தானுமல்லோ
அப்பையரென்னுமந்த அத்தனனுமேதுரைப்பான்
காசிவாழ்வேதியரே களிப்பாகவிப்பொழுது
என்னிடத்திலோர்பிள்ளை எழிலாய்வளர்ந்துவாரான்
ஆறுசாஸ்திரம்நாலு வேதமுந்தானறிவான்
மற்றுமுள்ளகலைகள்யாவும் சுற்றமுடன்தானறிவான்
அந்தநல்லபாலனுக்கு அடவாகசொல்லுவேன்கேள்
உங்கள்வசங்களிலே யுண்டோபெண்யென்றுகேட்க
அப்போதுகுப்பையர் அன்பாகயேதுரைப்பார்
பஞ்சவர்னக்கிளிப்போலும் பதுமைச்சிலைப்போலும்
படத்தினுருவைப்போலும் பார்க்கயெவ்வர்னமுடன்
என்னிடத்திலோர்பெண்ணு மெழிலாகயிருக்குதுகாண்
என்றுமேதானுரைக்க யிதைக்கேட்டுஅப்பையர்
நல்லதுயிருவருக்கும் நடத்துவோம்விவாகமென்று
கூட்டங்கள்கூடியல்லோ குணமாகவப்பொழுது
நாளுகள்நேமித்து நன்ருகவப்பொழுதே
முகூர்த்தப்பத்திரிகையும் முடிவாகத்தானெழுதி
ஆலயத்தில்செய்யும்படி யனைவருமொப்புக்கொண்டு
அவரவர்கள்மனைதேடி யன்பாகப்போய்ச்சேர்ந்தார்

பகவனுக்கும் ஆதிக்கும்
விவாகம் செய்வித்தல்.

இப்படிக்காகவல்லோ யிருக்குமந்தநாளையிலே
முகூர்த்தங்குறித்தநாள் முடிவாகவந்திடவும்

அந்தணர்களெல்லோரு மடங்கலுமொன்றாகூடி
காசிநகர்முழுதுங் களிப்பாயலங்கரித்தும்
விஸ்வேசராலயத்தில் விளங்கவேதானுமப்போ
பச்சைப்பந்தலுமல்லோ பாங்காகப்போடவித்து
விஸ்வேசர்தனக்குமல்லோ வேணயபிஷேகஞ்செய்து
அடவாகவாத்தியங்கள் அன்பாகத்தான்முழங்க
பகவனையுமாதியையும் பாங்காயலங்கரித்து
ஆலயத்திற்குள்ளாக அன்பாயழைத்துவந்து
பச்சைப்பந்தலதில் பாங்காகக்குந்தவைத்து
ஓமமதுவளர்த்தி உத்தமவேதியர்கள்
வேதமுறைப்படியே வேதமந்திரங்கள்சொல்லி
பகவனுடக்கைதனிலே பாங்காய்மங்கிலியமீந்து
ஆதியுடக்கழுத்தினிலே யன்பாகக்கட்டச்சொல்லி
மறையவர்களெல்லோரும் மங்களங்கள்தான்கூறி
ஆதியும்பகவனையும் அன்பாகத்தான்வாழ்த்தி
வந்திருந்தவேதியற்கு வளமாகவப்பொழுது
சந்தனபுஷ்பமொடுத் தாம்பூலந்தான்கொடுத்து
ஆமவடைமோர்குழம்பு அதிரசமும்பாயாசம்
முத்துப்போலன்னமிட்டு சுத்திலும்பதார்த்தம்வைத்து
பச்சடியோடுமங்கே பதினெட்டுவிதம்படைத்து
பொன்போல்பருப்புமிட்டு புத்துருக்குநெய்வார்த்து
வந்திருந்தவேதியர்கள் உண்டுப்பசியாறி
ஆதியும்பகவனையும் அன்பாகக்கொண்டாடி
அவரவர்கள்ஆத்துக்கு அடங்கலும்போனபின்பு
ஆதியும்பகவனையு மன்பாகத்தானழைத்து
படுக்கையறைஜோடித்துப் பாங்காகுப்பையராத்தில்
இருவரையுமறைக்குள்ளே யின்பமுடன்தள்ளிவிட்டு
ஆத்துக்குஅவரவர்க ளன்பாகப்போனபின்பு
படுக்கையறைதனிலே பகவனுமாதியரும்
சரசசல்லாபமுடன் சதுராகவிளையாடி
கொஞ்சிக்குலாவியல்லோ கூடியிருக்கும்போது
பகவனுதிமுகத்தைப் பார்த்திட்டா னற்றுமப்போ

நெற்றியிலேயோர்வடிவு நேராகத்தான்விளங்க
பார்த்தெல்லோபகவனும் பரிவாகவப்பொழுது
ஆதியரேபெண்மயிலே யாரணங்கே நீகேளாய்
உந்தனிடனெற்றியிலே யுற்றதுயோர்வடிவும்
எந்தவகைவந்தது யெனக்கறியக்கூறுமென்ன
அப்போதுஆதியரும் ஆரிழையாள் தானகைத்து
மரந்நீரேருவேதியரே மங்கையரைசெய்தசதி
வேழ்வியதுசெய்கையிலே விட்டெறிந்தசட்டுவத்தின்
காயமதுவல்லவோதான் காணமல்கேட்கவந்தீர்
காசித்தெருவில்விட்டுக் கைபோட்டுவோடி நீரே [ருள்
அன்றுகண்டவுன்முகத்தை யின்றுதான் கண்டேனென்
அம்மொழிபகவன்கேட்டு யாதியுடனேதுரைப்பான்
அன்றுயெழுதினது யாருக்குந்தப்பாது
தலையின்விதியைவெல்லத் தேவராலுமாகாது
போட்டயெழுத்தையுமே பிரட்டமுடியாது
அன்னாளில்தானுமல்லோ வயனுருங்கணக்கெடுத்து
இன்னாருக்கின்னபடி யென்றெழுதிவிட்டிருக்க
நம்மால்தடுப்பதற்கு யாகாதொருக்காலும்
ஏழரைநாட்டுசெனி யெனக்குப்பிடித்திருக்க
வாழவேயோசித்தால் வாய்க்குமோபெரும்வாழ்வு
காலசுத்தியப்பாம்பு கடிக்காமல்தான்விடுமோ
என்றுரைத்தப்பழமொழியும் எக்காலும்பிசகாமோ
உன்னைவிட்டுநானோடி வொளித்துயிருந்தாலும்
என்னைப்பிடித்தசனி யிட்டுவந்து விட்டுவிட்டான்
இனிமேலும்யோசனைகள் என்னயிருக்கின்றது
இந்தமருமந்தன்னை எழில்காசியோரறிந்தால்
பரச்சியென்றுவுன்னையிவ்வூர் பாப்பாரறிந்தாரானால்
வெட்டிப்புதைத்திடுவார் வல்லுயிரைவாங்கிடுவார்
இன்னமுங்காசிதனில் நாமிருக்கப்போகாது
பொழுதுவிடியுமுன்னே புரப்பட்டுநாமிருவர்
கானகந்தன்னிற்சென்று களிப்பாகவாழ்வமல்லால்
ஊரிலிருந்தோமானு லுயிரதுநில்லாது

என்றுபகவனுமே யெடுத்துரைக்கும்வேளையிலே
ஆதியருமப்பொழுது யம்மொழிக்குச்சம்மதித்து
பகவனுமாதியுமாய் பட்சமுடன்தான்கூடி
நடுராத்திரிவேளையிலே நலமாகயிருவர்களும்
காசிநகரைவிட்டுக் கடுகெனவேதானடந்து
கானகந்தேடியல்லோ களிப்புடன் வருலகையிலே
பகவனுக்குமப்பொழுதுப் பரிவாகத்தானுமல்லோ
பூருவக்கியானமதுப் புகழாகத்தான்பிரக்க
அப்போதுபகவனுமே யாதிமுகம்நோக்கி
நிர்க்கமுடன்செய்தி தெளியவேயேதுரைப்பான்
ஆதியெனும்பெண்மயிலே யரிவையரேசொல்கிறேன்கே
அரனார்விதித்தபடி யடைவாகவிப்பொழுது [ள்
எழுபகவதனை யின்பமுடன் நீபெருவாய்
பெண்நான்குஆண்மூன்று பிரியமுடனேபிரக்கும்
அந்தநல்லப்பிள்ளைகள்மேல் ஆசையதுவையாமல்
ஈன்றவுடன்கானகத்தி லெறிந்துவிட்டுயாதியரே
என்பின்னேவந்தையானல் யெழிலாகநாமுமேதான்
பிரமலோகந்தேடிப் புகழாகப்போய்சேர்ந்து
அயனுஞ்சரஸ்வதியாய் அமர்ந்துமேவாழ்ந்திருப்போ
என்மொழியையுரிதியாக ஏந்திழையேநீயும்நம்பி [ம்
வரவேண்டுமென்றெலவோ வயனனபகவன்கேட்க
அப்போதுவாதியரும் அடிவணங்கியேதுரைப்பாள்
பத்தாவேயுன்மொழிக்குப் பதில்மொழிவேருமுண்டோ
கொண்டவர்சொற்படிக்கு குருக்கே மொழியுமுண்டோ
உன்னுடையமனதின்படி யுகந்துநான்வாரேனென்ன
இருவருஞ்சம்மதித்து யேகியேகானகத்தில்
மகிழ்வாகத்தானடந்து மனங்களித்துவரும்வழியில்

ஆதியும் பகவனுங் கூடுதல்.

பாணகர்சேரிதன்னில் பண்புடன்வந்துமப்போ
அங்கிருக்குமண்டபத்தில் ஆதியும்பகவனுமே
கூடிசுகித்தவுடன் கொப்பெனவேயப்பொழுதும்
ஔவையெனும்பெண்குழந்தை யருளாகத்தான்பிரக்க

கண்டுமேதாயாருங் கலங்கிமிகத்தவித்தும்
என்னமாய்விட்டெலவோ யேகுவேனென்றழுக
அப்போதுவக்குழந்தை யன்னைமுகம்பார்த்து
அருளாகத்தானுமல்லோ யரைகுவதைக்கேளும்

ஔவையென்னும் பெண்குழந்தைக்கூறிய
வெண்பா.

இட்டமுடனென்றலையி லின்னபடியென்றெழுதி
விட்டசிவனுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமேயானாலும் பாரமவனுக்கன்னாய்
நெஞ்சமேயஞ்சாதே நீ.

க-வது. ஆதிசொல் விருத்தம்.

பரிவாகயாதியரு மீன்றெடுத்த
பாவையெனுமௌவையந்த குழந்தையப்போ
நெரியாக நீதிமொழி கூறக்கேட்டு
நேரிழையாளாதியரும் மனம்வெருத்து
அரியவேபகவனு ருறைத்தவண்ணம்
அக்குழந்தைதன்னையவ் வனத்தில்விட்டு
பிரியமனமில்லாமல் புலம்பிக்கொண்டு
பேதையாள்பகவன்பின் னேகுவாளே.

அம்மானை.

அம்மொழித்தான்கேட்டு அன்னைமனந்துணிந்து
குழந்தைதனைவிட்டுக் கொப்பெனவேயப்பொழுது
பகவனுடப்பின்னாலே பண்பாகத்தானடந்தாள்
அப்போதக்குழந்தைதன்னை யடைவாகத்தானுமல்லோ
அச்சேரிப்பாணகர்கள் அன்பாகத்தானெடுத்தும்
சீராட்டிக்குழந்தைதனை சிரப்புடன்வளர்த்துவந்தார்
இப்படித்தானிருக்க யெழிலாய்முன்சென்றதொரு
ஆதியும்பகவனுமே யக்கானகங்கடந்து
தொண்டனுடென்னுமந்த துலங்குநல்லூற்றுக்காட்டில்
விளங்கியதோர்மண்டபத்தில் வேதனுமாதியரும்
களிப்புடன்கூடியல்லோ கலவிப்புரிந்திடவே [க
உப்பையெனும்பெண்குழந்தை உகமையுடன் தான்பிரங்

கண்டெல்லோவாதியருங் கன்னியெனுங்குழவிதன்னை
எப்படிவிட்டேகுவேன் என்றெல்லோதானழுக
அப்போதுவக்குழந்தை அன்னைமுகம்பார்த்து
பிரியமுடன்வாய்திரந்து புகலுவதைக்கேளும்

உப்பையெனும் பெண்குழந்தைக் கூறிய

வெண்பா.

அத்திமுக லேறும்பிற றனவுயி ரத்தனைத்தஞ்
சித்தமகிழ்ந் தளிக்குந் தேசிகன்—முற்றவே
கற்பித்தான் போனனே கார்க்கக் கடவிலையோ
வற்பனே வன்ன யரன்.

உ-வது. ஆதிசொல் விருத்தம்.

ஏகியேபகவன்பின் னாதியாளும்
இஷ்டமுடன்கூடிடவே யெழிலதாக
பாகமாயுப்பையென்னும் பெண்குழந்தை
பண்பாகத்தான்பிறக்கக் கண்டுயாதி
தாகமாய்விட்டேக மனமில்லாமல்
தையலாள்புலம்பையிலே குழவிதானும்
யோகமாய் நீதிகளை யுறைக்கக்கேட்டு
யுளமகிழ்ந்துபகவன்பின் சென்றிட்டாளே.

அம்மானை.

இவ்வாறுத்தானுரைக்க வேந்திழையாளாதியற்கு
மனமுந்துணிந்துமல்லோ மக்குழந்தைதன்னைவிட்டு
பகவனுடப்பின்னாலே பண்பாகத்தானடந்தாள்
அதன்பிறகுஅக்குழந்தை அவ்வூரில்தான்வாழும்
வண்ணார்கள் தானெடுத்து வளர்த்துமே வந்தபின்பு
என்னாளுந்தெய்வமா யிருக்கின்றாளவ்வூரில்
அதுநிற்கமுன்புசென்ற ஆதியும்பகவனாரும்
சோழதேசத்தருகிற் சுகமுடன்போய்சேர்ந்து
அங்குள்ளச்சோலையிலே யன்பாகத்தான்கூட
அதிகமானென்னும்பிள்ளை யன்பாகத்தான்பிறக்க
கண்டெல்லோதாயாருங் கலங்கிமிகவாடி
இக்குழந்தைத்தன்னையுமே எவர்கள்காப்பார்களென்று
நீங்கமனமில்லாமல் நின்றுதாய்தவிக்கையிலே
அப்போதுவக்குழந்தை யருளாகயேதுரைக்கும்

அதிகமானெனனும் ஆண்குழந்தைக்கூறிய

வெண்பா.

கருப்பைக்குண் முட்டைக்குண் கல்லிடைட் டேரைக்கும்
விருப்புற் றழசளிக்குஞ் செய்ய—னுருப்பெற்ற
லூட்டிவளர்க்காறே வோகேடுவாய் யன்னுய்கேள்
வாட்டமுனக்கேன் மகிழ்.

௩-வது. ஆதிசொல் விருத்தம்.

சென்றுமேபகவனுடன் ஆதியாளும்
செழிப்பாகமூன்ருவது தானுமல்லோ
நன்ருகயோர்வனத்தில் சேர்ந்தபோது
நங்கையவள் நளினமுடன் தானுமல்லோ
குன்றுதயதிகமான் றன்னையீன்று
கோதைவிட்டுபிரியமனு மில்லாவாட
அன்றயக்குழவிஞான மறியவோத
ஆதிகண்டுபகவனுடன் அடுத்துச்சென்ருள்.

அம்மானை.

இந்தவண்ணந்தானுரைக்க யெழிலானத்தாய்கேட்டு
மனமுந்துணிந்தலவோ மாதுயந்தவாதியரும்
பகவனுடப்பின்னலே பண்பாகத்தானுஞ்சென்ருள்
அதன்பின்பு அக்குழந்தை அவ்வூரில்தான்வாழும்
சேரமானெடுத்தெலவோ சீராகவளர்த்துக்கொண்டார்
அப்படியவர்வளர்க்க ஆதியும்பகவனுமே
பட்டணமாம்பட்டணமாங் காவரிப்பூப்பட்டணமாம்
காவரிப்பூப்பட்டணத்தில் களிப்புடன்போய்சேர்ந்து
அங்குள்ளவோர்மண்டபத்தில் அன்பாகக்கூடினர்கள்
உருவையெனும்பெண்குழந்தை யுடனேபிறந்தனவாம்
அக்குழந்தைத்தன்னைவிட்டு யகலமனமில்லாமல்
தாய்நின்றுப்புலம்பையிலே யக்குழந்தையேதுரைக்கும்

உருவையெனும் பெண்குழந்தைக்கூறிய

வெண்பா.

அண்டைப்பைக் குள்ளுயிர்தன் றயநந்தத் தானநந்தும்.
அண்டத் துயர்பிழைப்ப தாச்சரிய—மண்டி
யலேகின்ற வன்று யாறுடைய வுண்மை
நிலேகண்டு நீயறிந்து நில்.

௪-வது. ஆதிசொல் விருத்தம்.

அடுத்துமேபகவன்பின் ஆதியாளும்
அன்பாகத்தான்சென்று யருமையாக
தொடுத்துமேநான்கா வதுதான்கூட
துலங்கவேயுருவையெனும் பெண்பிறக்க
விடுத்தேகமனமில்லா தாதியாளும்
வெகுவாகநின்றங்கே புலம்பும்போது
எடுத்துமேகுழவிசில நீதிகூற
ஏங்கியேயாதியரும் ஏகிட்டாளே.

அம்மானை.

இவ்வாறுக்குழந்தைபது யெடுத்துமிகக்கூற
அதுகேட்டுத்தாயாரு மவள்மனதுமேதுணிந்து
பகவனுடப்பின்னாலே பண்பாகப்போனபின்பு
அக்குழந்தைத்தன்னையுமே யவ்வூரில்தான்வாழும்
கல்விப்போர்தாமெடுத்துக் களிப்பாய்வளர்த்தபின்பு
பாரத்தவஞ்செய்துப் பத்திரக்காளியாகி
சபானுதருடனே சதுராய்நடனஞ்செய்து
வீரபத்திரரைமணம் விளங்கச்செய்துவாழ்ந்துவாராள்
இக்கதையிப்படியிருக்க யெழிலாய்முன்சென்றதொரு
பகவனுமாதியறும் பாங்காகத்தானுமல்லோ
திருவாரூரையடை,ந்து திகழாமோர்மண்டபத்தில்
கலந்தெல்லோக்கூடுகையில் கபிலரவர்தான்பிரந்தார்
கண்டெல்லோதாயாருங் காளையந்தக்குழந்தைதன்னை
யார்காப்பாரென்றுசொல்லி யன்னையறும்புலம்பயிலே
அப்போதுவக்குழந்தை யருளாகயேதுரைக்கும்

கபிலரென்னு மாண்குழந்தைக்கூறிய

வெண்பா.

கண்ணுழையாக் காட்டிற் கருங்கற் றவளைக்கு
முண்ணும் படியறிந் தூட்டுமவர்—நண்ணு
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குந் தொழிலென்ன தான்.

ரு-வது. ஆதிசொல் விருத்தம்.

காணவேஜந்தா வதுவனத்தில்
களிப்பாகயாதியுடன் பகவன்கூட
பூணவேகபிலரெனு மாண்குழந்தை
புகழாகபிறக்கயாதி கண்டுமப்போ
தோணவேவிட்டேக மனமில்லாமல்
தோகையரும்நின்றுமே துயரங்கொள்ள
வேணவேஞானமதைக் குழவிவிள்ள
விளங்கவேகேட்டாதி வெருத்திட்டாளே.

அம்மானை.

என்றுரைக்கவக்குழந்தை யேந்திழையாளாதிகேட்டு
மனந்துணிந்துபகவன்பின்னே மகிட்சியுடன் சென்றபி [ன்பு
அவ்வூரில்தான்வாழும் அந்தணனானதொரு
பிள்ளையில்லாததொரு பாப்பையனென்பவரும்
அக்குழந்தைதன்னையுமே யவரெடுத்துதான்வளர்த்தார்
அதுநிற்கமுன்புசென்ற யாதியும்பகவனுமே
வெள்ளிமலைச்சாரலிலே வளமாகவந்துகூட
வள்ளியெனும்பெண்குழந்தை வளமாகத்தான்பிரக்க
இக்குழந்தைத்தன்னைகாற்போ ரெவரென்றுதாய்கலங்க
அப்போதுவக்குழந்தை யடைவாகவேதுரைக்கும்

வள்ளியெனும் பெண்குழந்தைக்கூறிய

வெண்பா.

அன்னை வயற்றி லருந்தீ வளர்த்தவன்று
மின்னும் வளர்க்கானே வென்றயே—மின்னரவஞ்
சூடும் பெருமான் சுகோட்டி வின்றுவினை
யாடும் பெருமா னவன்.

சு-வது. ஆதிசொல் விருத்தம்.

வெருத்துமேயவ்வனமா மதனைவிட்டு
விளங்கவேவெள்ளிமலை சாரல்வந்து
பொருத்தமுடனுதியொடு பகவன்கூட
பெண்குழந்தைவள்ளியென பிறக்கவப்போ

திருத்தமாயக்குழந்தைத் தன்னைவிட்டுத்
நான்பிரியமனமில்லா தவிக்கும்போது
கருத்தாகவக்குழந்தை ஞானமோதக்
கண்டாதிமனந்திடங்கொண் டேகினளே.

அம்மானை.

என்றுரைக்கத்தாய்கேட்டு யவள்மனமுந்துணிந்து
பகவனுடன்கூடிப் பரிவாகச்சென்றபின்பு
அக்குழந்தைத்தன்னையுமே யடைவாகவப்பொழுது
மலைக்குறவர்தாமெடுத்துமகிழ்ச்சியுடன்தான்வளர்த்தார்
ஆதியும்பகவனுமே யன்பாகத்தானுமப்போ
மயிலாப்பூர்யிலுப்பைத்தோப்பில் மறிவியங்குதான்கூட
திருவள்ளுவருமப்போத் திகழாகத்தான்பிறந்தார்
கண்டெல்லோயாதியருங் காளையத்தக்குழந்தைதன்னை
விட்டுப்பிரியமன மில்லாமற்புலம்பையிலே
அப்போதுவக்குழந்தை அன்னையற்குமேதுரைக்கும்

திருவள்ளுவ நாயனார்கூறிய

வெண்பா.

எவ்வுயிருங் காக்கவொரு வீசனுண்டோ வில்லையோ
வவ்வுயிரில் யானொருவ னல்லவோ—வவ்வி
யருதவது கொண்டிங் கலைவதே னன்னே
வருதுவது தானே வரும்.

எ-வது. ஆதிசொல் விருத்தம்.

நலமாகத்திருமயிலை தனக்குவந்து
நங்கையெனுமாதியரை பகவன்கூட
குலமாகவாண்குழந்தைப் பிறக்கவப்போ
கோதையாதிவிட்டேக வாடும்போது
பலவாகஞானமதுப் பாலன்கூற
பரிவாகயாதியருங் கேட்டுமேதான்
தலமாகப்பாலனுட யாசைவிட்டு
தையலாதிபகவன்பின் தான்சென்றாளே.

அம்மானை.

அம்மொழித்தான்கேட்டு யன்னையரும் மனந்துணிந்து
பகவனுடன்கூடிப் பரிவாகச்சென் றமப்போ

ஆதிசிவன் றனையும் வன்பாகவப்பொழுது
இருவருமாகவல்லோ யெழிலாகத்தோத்தரிக்க
பரமசிவனாரும் பார்வதியாளப்பொழுதும்
முப்பத்துமுக்கோடி முனிவருடன்தேவருமாய்
தெரிசினந்தந்தெலவோ திகழாகவப்பொழுது
பகவனுக்கும்ஆதியற்கும் பாரசாபத்தை நீக்கி
பிரமப்பதியதனைப் புகழாகத்தானளித்து
வாழும்படியாக வரங்கொடுத்துத்தான்மறைந்தார்
தேவர்முனிவர்களும் தன்பதியைப்போய்ச்சேர்ந்தார்
அயனோடுசரஸ்வதியும் அன்னவாகனமேறி
பிரமலோகந்தன்னைப் போய்ச்சேர்ந்தாரப்பொழுது
அரியயன்சண்டையெனு மம்மானையிக்கதையை
பாடிப்படித்தவரும் பட்சமுடன்தான்வாழி
பிரபலமாய்ச்சொன்னவரும் பிரியமுடன்கேட்டவரும்
யென்னாளுமிப்புவியில் யெழிலாகத்தான்வாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்.

வாழி விருத்தம்.

பரிதியொடுமதிவாழி பாரும்வாழி
பரிவாருமும்பரொடு சித்தர்வாழி
தெரியாகப்பலவுயிரும் நீடிவாழி
நேரிழையாளாதியொடு பகவன்வாழி
அரியயன்சண்டைதனை படித்தோர்கேட்டோர்
அன்பாகப்புவியுள்ள மட்டும்வாழி
பிரியமுடனச்சிலிட்டோர் பெருமையாக
பேரானயஷ்டலட்சுமி பெருகிவாழி.

அரியயன்சண்டை அம்மானை

முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

மருமக்கள் துயர அம்மானையின்

புத்தகவிளம்பரம்.

இந்துதேசமென்னு மின்னாட்டின்கண் செழிப்புற்றோங்கும் நம்மவருகிய இந்துக்கள் யாவத்திராளுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்? அருமையாகியப்புத்திரனுக்குப் பெருமையாகிய பெண்ணைத்தேடி திருமண முடித்தபின்பு வாழவரும் மருகிகளை மாமியாரும், நாத்தினிமார்களும், மச்சினிமார்களும், செய்கின்றகொடுமைகளை சகிக்காதவராய் கமலம்பாள், 1. காந்திமதி, 2. பத்மாவதி, 3. மயிலாப்பூர் மரகதவல்லி, 4. சென்னைமீனுள், 5. கிருஷ்ணம்மாள், 6. மதனசுந்தரி, 7. குணபூஷணி, 8, இவர்கள்பட்ட துயரங்களும் மாமியாராகியக் கிழவி தான்வாழ்ந்ததைக்கூறுதலும் இவைகளை வெகுவினோதமாக யெழுதி (☞ மருமக்கள் துயர அம்மானையென்று ☜) பெயரமைத்து படங்களுடன் அச்சிட்டிருப்பதால் இதனை ஒவ்வொரு குடும்பங்களிலும் வாங்கிவாசிப்பாராகில் மருமகள் மாமியாருக்கு நடக்கவேண்டியமரியாதையும், மாமியார் மருமகளைவைத்து பழக்கவேண்டிய கிரமமும் நன்றாய்விளங்கும் இந்தபுத்தகம் யாவருக்கும் உபயோகமானதால் விலையும் சகாயமாக வைத்திருக்கின்றன. இதைகவனிப்பீராக.

புத்தகம் 1-க்கு விலை அணு 0 3 0

10-புஸ்தகம் ஒரேதகுதியில் மொத்தமாய் வாங்கினுல் 2-புஸ்தகம் அதிகமாய் கொடுக்கப்படும்.

இப்படிக்கு,

☞ பூ. சு. குப்புசாமி முதலியார்.

ஸ்ரீசுந்தரவிலாசம் பிரஸ்.

சூளை போஸ்ட், மதருஸ்.